# இளம் முல்லை



## சிறுகதைப் பூங்கொத்து

மகாஜனக் கல்லூரித் தமிழ்மன்றம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை நிறுவிய
பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையின்
பாரியார்
தையல்நாயகம் அவர்களின்
நினைவுக் கேடயப் போட்டியில்
முதல் ஆறு இடங்களைப் பெற்ற
சிறுகதைகளின் தொகுப்பு நூல்

# இளம் முல்லை

*நினைவுக்கேடய அன்பளிப்பு :*

திரு. தெ. து. ஜயரத்தினம், B. A. (Lond.), J. P.,
*முன்னைநாள் அதிபர், மகாஜனக் கல்லூரி*

*வெளியீடு :*

உயர்தர மாணவர் தமிழ் மன்றம்
மகாஜனக் கல்லூரி

உ
சிவமயம்

# இளம் முல்லை

## சிறுகதைப் பூங்கொத்து

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
உயர்தர மாணவர் தமிழ்மன்ற வெளியீடு

கலியுகம் 5075
பிரமாதிச ஆண்டு ஆடித் திங்கள் 5ஆம் நாள்

20 - 7 - 73

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

உயர்தர மாணவர் தமிழ் மன்றம்

அலுவலர்

தலைவர்: பொ. இரகுபதி

செயலாளர்: ச. பாலச்சந்திரன்

பொருளாளர்: க. ஜெயசீலன்

இலங்கைப் பல்கலைக் கழகத்துப் பேராதனை வளாகத்
தமிழ்ப் பேராசிரியர்
நற்றமிழ்க் கலைச்செல்வர்
கலாநிதி சு. வித்தியானந்தன், M.A.(Cey.),Ph.D.(Lond.)
வழங்கிய

# அணிந்துரை

இக்கால வாழ்விலே தோன்றும் பல்வேறு சிக்கல்களையும் உணர்ச்சிகளையும் வாசகரோடு இலகுவாகவும் சுருங்கிய காலத்திலும் பகிர்ந்துகொள்ள உதவும் அரியதொரு சாதனமாகச் சிறுகதை அமைந்துள்ளது.

தமிழிலே சிறுகதை தோன்றிய நாள்முதல் நல்லுணர்வுகளை வளர்க்கவும் போலிகளை ஒதுக்கவும் அவ்விலக்கியவகை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மகாஜனக் கல்லூரித் தமிழ்மன்ற மாணவர் வெளியிடும் இச் சிறுகதைத் தொகுதி, அச் சிறுகதைகளைப் படைத்த ஆசிரியர்களின் மனக்கிடக்கைகளையும், நன்மையை வளர்த்துத் தீமையை அகற்றுவதில் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

உழைப்போரே நாட்டின் முதுகெலும்புகள் என்று பேசிக்கொண்டே அவர்களின் உழைப்பைச் சுரண்டும் பெரிய மனிதர்களையும், இலஞ்சத்துக்கும் ஊழலுக்கும் அடிமைப்பட்டு முறைகேடுகளுக்குத் துணைநிற்கும் பெரும்பதவி வகிப்போரையும், சமயப்பற்றுப் பூண்டு கொண்டே இளமனங்களில் வளரும் தூய்மையான அன்பைச் சமய அந்தஸ்துப் பேதங்களை முன்னிட்டு வெட்ட முனையும் சமூகப் பிறவிகளையும், வேலை பறி போன கெட்ட காலத்திற்குப் பிறக்கப்போகும்

பிள்ளையைக் குற்றங்கூறும் மூடத்தனத்தினரையும், மனிதாபிமான சிந்தையற்ற பிடிவாத குணத்தினரையும், வீட்டில் நிலவும் துன்பத்தினுலும் குடும்பப் பொறுப்புக்களினுலும் மணம் முடிக்க இயலாது வறிதே வாழ்வை நடத்தும் துர்ப்பாக்கியசாலிகளையும் கண்டு இவ்வாசிரியர்கள் மனம் சோர்ந்திருக்கிறூர்கள்.

மனிதர் இழிதொழில் செய்வோராயும், அத்தகைய செயல்களுக்கு உடந்தைகளாவோராயும், சிறுமைப் பட்டவிடத்தும் நன்மை வெல்லவும் தீமை தோற்கவும் செய்யும் விதியையும், துன்பங்களுக்கு மத்தியிலும் பரிவோடு வாழும் தியாக சிந்தையினரையும் கற்பனை செய்தும் கண்டும் இவ்வாசிரியர்கள் பூரித்திருக்கிறூர்கள்.

இவ்வுலக வாழ்வையும் அதன் பிரச்சினைகளையும் பலவாருகப் பார்க்கும் இச் சிறுகதை ஆர்வமும் கதைகளிற் கையாளப்பட்டுள்ள மெச்சத்தக்க மொழி நடையும் விதந்து குறிப்பிடத்தக்கவை.

# வாழ்த்துரை

திரு. பொ. ச. குமாரசுவாமி, B. A. (Cey.), Dip-in-Ed. (Cey.)
*அதிபர், மகாஜனக் கல்லூரி.*

*எமது கல்லூரி உயர்தர மாணவரின் தமிழ்மன்றம், சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிடுவதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்; பெருமைப் படுகின்றேன். இம் மன்றத்தினர் சிறுகதைப் போட்டி ஒன்றை நடாத்தினர். இது அருமையான முயற்சி. இந்தப் போட்டியில் முதல் ஆறு இடங்களையும் பெற்ற சிறுகதைகளின் தொகுப்பே இந் நூல். இளஞ் சந்ததியினரின் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டவும், இளம் எழுத்தாளர்களை உருவாக்கவும் இப்படியான போட்டிகளும் நூல்வெளியீடுகளும் இன்றியமையாதன. எனவே, 'இளம் முல்லை' என்ற பெயரில் இம் மன்றம் வெளியிடுகின்ற சிறுகதைத் தொகுப்பு எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.*

*இப் போட்டியையும் நூல் வெளியீட்டையும் இனிது நிறைவேற்றிய மன்றத்தின் செயற்குழுவிற்கும், மன்றத்தின் பொறுப்பாசிரியராகவிருந்து நன்கு உழைத்து வருகின்ற திரு. த. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் மன்றத்தினரின் இத் தொண்டு ஆண்டு தோறும் ஒழுங்காக நடைபெறவேண்டுமெனச் சிவகாமி சமேத ஆனந்த நடராசப்பெருமானை இறைஞ்சுகிறேன்.*

பொ. ச. குமாரசுவாமி

*15 - 7 - 73*

# புதிய அதிபரின் வாழ்த்துரை

திரு. சு. சிவசுப்பிரமணியம், B. Sc. (Cey.) Dip-in-Ed. (Cey.)
அதிபர், மகாஜனக் கல்லூரி.

எமது கல்லூரித் தமிழ் மன்றத்தினர் தமது படைப்பான 'இளம் முல்லை' என்னும் சிறுகதைத் தொகுப்பினை வெளியிடும் முயற்சியை அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி எய்தினேன்.

பிரபல எழுத்தாளர்களும் பிரசுர கர்த்தாக்களுங் கூட நூல்களை வெளியிடத் தயங்கும் இன்றைய சூழ் நிலையில், முகிழ்நிலையில் உள்ள மாணவர்கள் கமழ் நிலையில் கதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிடுவது பாராட்டுதற்குரியது.

குறிக்கோளில்லாது திகைக்கும் இக்கால இளைஞர் சமுதாயத்தினரிடையே இலக்கியச் சிந்தனை, கற்பனை உணர்ச்சி என்பன வரண்டு ஆக்கபூர்வமற்ற முயற்சி கள் மலிந்து காணப்படும் இக் காலகட்டத்தில் மகா ஜனக் கல்லூரித் தமிழ் மன்றத்தினர் தமது இச் சாதனை மூலம் ஏனைய இளைஞர் இயக்கங்களுக்கு வழி காட்டிகளாக அமைந்துவிட்டனர்.

தமிழ் மன்றத்தின் 'இளம் முல்லை', மணங்கமழ வாழ்த்தும் அதேவேளையில் மன்றத்தின் முயற்சிகண்டு மிக மகிழ்கின்றேன்; இந்த முயற்சியைப் பாராட்டு கின்றேன்.

2 - 8 - 73 சு. சிவசுப்பிரமணியம்

தமிழ் மன்றப் பொறுப்பாசிரியராக இருந்து
அதன் வளர்ச்சிக்குத் தொடக்ககாலத்தில்
அளப்பரிய தொண்டு புரிந்த
செந்தமிழ் ஆசான்

**புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துப்பா

பைந்தமிழ் மண்ணில் பசிய மறுமலர்ச்சி
சிந்தும் சிறுகதையாம் சில்கொடியில் - செந்தேன்
இளமுல்லை ஒன்றுகாண் இன்தமிழ் மன்றம்
வளமிகும் மாசனவில் வாழ்ந்து.

## தமிழ் அணங்கு கூறுகின்றாள்:

"கடும்வரட்சி நிலவியது; கயங்காத காற்சட்டை மேற்சட்டை அணிந்து அலுவலகத்திற் கடமை புரிபவர்கள் வியர்வையைப் பற்றிக்குறை கூறினர். பயிரின் வாட்டமும் உழவரின் ஏக்கமும் அவர்களுக்கு விளங்காதவை. திடீர்என்று மழை வந்தது. காய்ந்தநிலம் குளிர்ந்தது. முல்லைக் கொழுந்து என் அறையின் சாளரத்தருகே நிலத்தில் இருந்து மெல்லத் தலைகாட்டியது. அதற்கு ஆதாரமாக மரக் கொம்பொன்றை நட்டேன். மழைக்காலம் வெய்யிற் காலம் பனிக்காலம் எனவந்து போயின. ஒருநாள் என் சாளரத்தருகே மெல்லிய பூங்காற்றுடன் முல்லைப் பூவின் மணம் தவழ்ந்து வந்தது. 'அன்று எனக்கு ஆதாரங் கொடுத்த உங்களுக்கு என் காணிக்கை,' என முல்லைப் பூங்கொத்து குறுநகை செய்தது. எம் இளைஞர் குழாமும் முல்லையை ஒத்தவர்.

— 'தசம்'

# பதிப்புரை

இருபத்தைந்தாவது வயதெல்லையை அணுகிக் கொண்டிருக்கும் மகாஜனக் கல்லூரி உயர்தர மாணவர் தமிழ் மன்றத்தின் சாதனைகளில் ஒன்று, இச் சிறுகதைத் தொகுதி. எமது மன்றத்தால் நடாத்தப்பட்ட சிறு கதைப் போட்டியில் முதல் ஆறு இடங்களையும் பெற்ற சிறுகதைகள் இதில் அம்முறையே இடம்பெற் றுள்ளன.

இப் போட்டியை நடாத்துவதற்கும் நூலினை வெளியிடுவதற்கும் ஆரம்பமுதல் இறுதிவரை ஆக்க மும் ஊக்கமுந் தந்து உறுதுணையாக விளங்கி எம்மை வழிப்படுத்திய மன்றப் பொறுப்பாசிரியர் திரு. த. சண்முகசுந்தரம் அவர்களுக்கு நாம் மிகுந்த கடமைப் பாடுடையோம். அவருடைய முயற்சி, மகாஜனக் கல்லூரியில் இளம் எழுத்தாளர்களை உருவாக்குவதற் குப் பெரும் உதவியாக உள்ளது.

ஆண்டுதோறும் சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெறும் மாணவருக்கெனத் திருமதி தையல்நாயகம் துரையப்பாபிள்ளை நினைவுக் கேடயத்தை எமது முன்னை நாள் அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் வழங்கியுள்ளார்கள். இந்தப் பணி நடைபெற்ற காலத்தில் அதிபராக இருந்த திரு. பொ. ச. குமார சுவாமி அவர்கள் எமது முயற்சிக்கு மிகுந்த ஆதரவு அளித்ததுடன் வாழ்த்துரையும் வழங்கியுள்ளார். இந் நூல் அச்சேறுங்காலை அதிபராகக் கடமையேற்ற திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து ஆதரவு அளித்தார்கள். அவருடைய வாழ்த்துரையும் இங்கு இடம்பெற்றுள்ளது. எமது மன்றத்தை நிறுவுவதிற் பெரும் பங்குகொண்டவரும், அதன் ஆரம்பகாலப் பொறுப்பாசிரியராக விளங்கியவருமாகிய எமது தமிழ்

ஆசிரியர் புலவர் நா. சிவபாதசுந்தரனுர் அவர்கள் இதற்கு ஒரு வாழ்த்துப்பா வழங்கியுள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

எமது கல்லூரி ஆசிரியர்களான திரு. ச. ஆறுமுகராசா, மயிலங்கூடலூர்க் கவிஞர் திரு. பி. நடராசன், யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. ஆ. சிவநேசச்செல்வன் ஆகியோர் இச் சிறுகதைப் போட்டிக்கு நடுவர்களாகக் கடமையாற்றினர். இவர்களுக்கு எமது உளப்பூர்வமான நன்றி.

மேலும், அச்சுப் பிழைகளைத் திருத்தி உதவிய எமது ஆசிரியர் மயிலங்கூடலூர்க் கவிஞர் பி. நடராசன் அவர்களுக்கும், கையெழுத்துப் பிரதியை அழகிய முறையில் தயாரித்துதவிய எமது மன்ற உறுப்பினர் செல்வன் க. நாகேஸ்வரன் அவர்களுக்கும், அட்டைப் படத்தை வரைந்துதவிய மன்ற உறுப்பினர் செல்வி சி. சிவகாமிப்பிள்ளை அவர்களுக்கும், முகப்புப்பட அச்சு தயாரித்துதவிய 'கொழும்பு நிழற்பட நிலைய' உரிமையாளர் திரு. அ. குகதாசன் அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

இறுதியாக இந்த நூலினை விரைவாகவும் சிறப்பாகவும் அச்சிட்டுதவிய தெல்லிப்பழை குகன் அச்சகத்தாருக்கும் நன்றிகூறித் தமிழ் உலகிற்கு இச் சிறு நூலினை உவந்தளிக்கின்றேம். தமிழன்பர்கள் இரு கரம் நீட்டி இதனை வரவேற்பார்கள் என நம்புகிறேம்.

வணக்கம்

மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை
18 - 7 - 1973

தமிழ் மன்றத்தினர்

# பொருளடக்கம்


1. பெரிய மனிதர்கள் — செல்வன் இரா. நாகராஜன்
2. வாழ்வின் மாயைகள் — செல்வன் ம. திபாகராம்
3. சகடக்கால் — செல்வி அ. புவனேஸ்வரி
4. இரத்தத் தொடர்பு — செல்வி ந. திருமகள்
5. பரிசு — செல்வன் சு. கணேசலிங்கம்
6. தியாகச் சுடர் — செல்வி சி. சுதந்திரச்செல்வி

# பெரிய மனிதர்கள்

இரா. நாகராஜன்

கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரே பசுமை. அந்தப் பசும் பரப்பிலே இடையிடையே ஒற்றையடிப் பாதைகள் கோடுபோட்டாற்போல் தெரிந்தன; ஆனால் அதையெல்லாம் இரசிக்கக்கூடிய மனநிலை சிவப்பிரகாசத்திற்கு அப்பொழுது இல்லை. சிவப்பிரகாசம் கீழே இறங்கப்போகிறார் என்பதற்கு முன்னறிவிப்பாகக் காரின் கதவு கிறீச்சிட்டது. சிவப்பிரகாசம் தனது உடம்பிற்குக் கார் பொருத்தமானதாக இருக்கவேண்டுமென்று முன்கூட்டியே யோசித்துத்தான் அந்தக் காரை வாங்கினாரோ என்னவோ தெரியவில்லை. கார் நல்ல பெரிதாக இருந்தது. கதவின் கிறீச் ஒலியில் காரின் பின் ஆசனத்தில் அதுவரை சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்த, அவரிலும் பார்க்க ஓரறிவு குறைந்த (ஆனால், சிவப்பிரகாசத்திற்கு ஆறறிவு என்பதை ஒருவரும் ஒத்துக்கொள்வதில்லை) அவரைப்போல் இருமடங்கு கொழுத்திருந்த அவருடைய நாய் விழித்துக் கொண்டதற்கடையாளமாக 'வள்...... வள்'...... என்று குரைத்தது. அது குரைக்கும்பொழுது 'நானும் வரட்டுமா?' என்று கேட்பதுபோலிருந்தது. வேறு யாரும் மனிதர்களாயிருந்தால் 'சும்மா வாயை மூடிக் கொண்டிரு' என்று சிவப்பிரகாசமும் பதிலுக்குக் குரைத்திருப்பார். ஆனால், அது அவருடைய அருமை நாயா

யிற்றே...... அதற்குச் செலவழித்த அளவு தனது மகனுக்குச் செலவழித்திருப்பார் என்பது சந்தேகமாயிருந்த பொழுதிலும் தனது மகனிலும்பார்க்க அந்த நாயில் மிகவும் அன்பாயிருக்கிறுர் என்பது மறுக்கமுடியாத உண்மை. காரின் பின்கதவைத் திறந்து 'கம் அவுட் ஜிம்மி' என்று அன்பொழுகக் கூறியதும் 'ஜிம்மி' (அதுதான் அந்த நாயினுடைய பெயர்.) ஒருவாறு தனது உடலைக் காரின் கதவினூடாகத் திணித்து வெளியே வந்துவிட்டது. வெளியே வந்ததும் உடலை ஒருமுறை சிலிர்த்துக்கொண்டு 'எப்படி என் திறமை; இந்தக் கதவினூடாக வெளியே வந்துவிட்டேன்' என்று கேட்பதுபோல் எஜமானை ஏறிட்டு நோக்கியது.

சிவப்பிரகாசம் எப்பொழுது அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்தாரோ அப்பொழுதே இந்தப் பெரிய காரையும், காரில் தாம் இருந்ததுபோக மீதி இடத்தில் இருப்பதற்காக இந்த நாயையும் வாங்கிவிட்டார். அரசியல் வாழ்வில் அவர் புகுந்ததும் அவை அவருக்கு அத்தியாவசியமாக இருந்தன. எத்தனையோ இக்கட்டான சந்தர்ப்பங்களில் அந்தக் காரும் நாயும் அவர் அந்த இக்கட்டுகளிலிருந்து தப்பி வருவதற்குப் பெரிதும் உதவிபுரிந்துள்ளன. சிவப்பிரகாசம் அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்திருக்காவிட்டால் அவருக்கு அவையிரண்டும் தேவைப்பட்டிருக்கா. அப்படியே தேவைப்பட்டிருந்தாலுங்கூட அவற்றை வாங்குவதற்கு அவரிடம் பணமும் இருந்திருக்காது.

'சோலையூர் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம்' என்று எழுதப்பட்டிருந்த அந்தப் பெயர்ப் பலகையை ஒருமுறை ஏறிட்டு நோக்கிவிட்டு அருகில் இருந்த அதன் தலைமை நிலையத்திற்கு விரைந்து நடந்தார் சிவப்பிரகாசம். இடையிடையே 'ஜிம்மி, கம் குயிக்... கம் குயிக்'... என்று அலறிக்கொண்டிருந்தார். சிவப்பிரகாசம் வெளியிலெல்லாம் இப்பொழுது

ஆங்கிலத்தில் பேசுவதில்லை. அவர்களுக்கெல்லாம் இப்பொழுது தாய்மொழியில் பற்று ஏற்பட்டிருக்கிறது; ஆனால், அவருடைய நாயிடம் மட்டும் ஆங்கிலத்தில் தான் பேசுவார். ஏனென்றால் அவருடைய நாய்க்கு அவர் ஏற்படுத்திக் கொடுத்த தாய்மொழி ஆங்கிலந் தானும். ஆனால், சிவப்பிரகாசம் தேர்தற்காலங்களில் நாயிடம்கூட ஆங்கிலத்தில் பேசமாட்டார். அவ்வளவிற்கு அப்பொழுது அவரிடம் தமிழ்மொழிப் பற்று ஏற்பட்டிருக்கும்; ஆனால் அவருக்குத் தமிழில் பேசுவது சற்றுச் சிரமமாகத்தான் இருந்தது. மிகமிக அருவருப்பாக இருந்ததென்றும் சொல்லலாம். என்றாலும் அவர் அவ்வப்போது 'இந்த வேதனையெல்லாம் தேர்தல் முடியும் வரைதானே' என்று நினைத்து ஆறுதல் அடைவார். தேர்தலில் வென்றபின்பு அவர் தனது சுயரூபத்தைக் காட்டினால் வாக்களித்தவர்கள் தமது வாக்குச்சீட்டைத் திருப்பிக் கேட்பார்களா? — என்ன? ...

ஒருவாறு கார் நின்ற இடத்தில் இருந்து கிட்டத்தட்ட இருநூறு யார் தூரத்தில் இருந்த அக் குடியேற்றத் திட்டத்தின் செயலகத்துட் பிரவேசித்து தொப்பெனக் கதிரையில் ஆயாசத்தோடு விழுந்தார். அவரது பருத்த சரீரத்திற்கு 'விழுந்தார்' என்று கூறுவது பொருத்தமற்றது. எனவே 'அமர்ந்தார்' என்று கூறுவோம். அவருக்குப் பக்கத்தில் நிலத்தில் இருக்கவேண்டி இருக்கிறதே... என்று சங்கோசப்பட்டுக்கொண்டே அவருடைய 'அல்சேஷன்' நாய் நாக்கை வெளியில் தொங்கப்போட்டுக்கொண்டே அமர்ந்தது. 'இவருடைய நாக்குப் பல்வேறுவிதமாக முன்னுக்குப்பின் முரணாக வளைவது எப்படி?' என்று குழம்பிக்கொண்டிருக்கும் நீங்கள் அந்த நாயினுடைய நாக்கைப் பார்த்திருந்தால் எப்படியென்று இலகுவில் புரிந்திருக்கும். சிவப்பிரகாசத்திற்கு நாயைப்போல் திறமையில்லை என்று நினைத்து விடாதீர்கள். அவருடன் நெருங்கிப் பழகுபவர்களுக்குத்தான் அவரது நாக்கும் பல்வேறு விதங்களில் -

பல்வேறு கோணங்களில் வளையக்கூடியதென்ற ரகசியம் தெரியும்.

சிவப்பிரகாசம் கதிரையில் அமர்ந்து நிமிர்வதற்குள் அவருக்கு முன்வந்து நின்றூர் தருமலிங்கம். 'பெயரைக்கொண்டு ஆளை எடை போடாதீர்கள்' என்பதற்கு இவரொரு நல்ல எடுத்துக்காட்டு. இவர் சிவப்பிரகாசத்தின் வாலோ? அல்லது சிவப்பிரகாசம் இவரின் வாலோ? என்பது அவர்கள் இருவருக்குங்கூட இன்னும் புரியாததோர் புதிர். அங்குள்ள பொருட்கள் தனது உடைமையல்ல என்பதால் தருமலிங்கம் சிறிது அதிகமாகவே சிவப்பிரகாசத்தை உபசரித்தார். குளிர் பானங்களால் சிவப்பிரகாசத்தைக் குளிர்வித்தால் தானே அவர் தருமலிங்கத்தின் நெஞ்சைக் குளிர வைப்பார்.

'ஏது, இவ்வளவு தூரம்?' என்று உபசாரத்திற்காகத் தருமலிங்கம் கேட்டார். 'தெரியாதோ?' என்று சிவப்பிரகாசம் ஒரு சிமிட்டலுடன் கூறிஞல் தருமலிங்கத்திற்கு விடயம் புரியாமலா இருக்கும். சிறிது நேர அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளின் பின் அந்தக் குடியேற்றத் திட்டத்தின் களஞ்சிய அறையிலிருந்து ஒரு மூடை மிளகாய் சிவப்பிரகாசத்தின் காரின் 'டிக்கிக்குள்' இடம் மாறியது. சிவப்பிரகாசம் கார் வாங்கும் பொழுது இதையும் யோசித்துத்தான் வாங்கிஞரோ? என்னவோ... டிக்கி பெரிதாக இருந்தது. இந்த இடமாற்ற விடயம் ரவியின் கண்களுக்குத் தட்டுப்பட்டு இருக்காவிட்டால் சிவப்பிரகாசத்திற்குக் கஷ்டம் வந்திருக்காது.

அந்தச் 'சோலையூர் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்திற்குப்' பொறுப்பாளராகத் தருமலிங்கத்தையும் உதவிப் பொறுப்பாளராக இளைஞனை ரவியையும் அரசாங்கம் நியமித்திருந்தது. கார் நின்ற இடத்தை ரவியின் அறையிலிருந்து பார்த்தால் நன்கு தெரியும்.

ரவி யன்னலின் திரைச்சீலையை இழுத்து மூடிவிட்டு எழுந்தான். அவன் உதடுகள் 'இதுதானு நடக்கிறது?' என முணுமுணுத்துக்கொண்டிருந்தன. சென்ற மாதம் பரிசோதகர் ஒருவர் வந்து கணக்குகளைப் பரிசீலித்ததும் 'இதில் ஏதோ குளறுபடி இருக்கிறது' என்று முன்னுல் இருந்த தருமலிங்கத்திடம் கேட்டதும், தருமலிங்கம் 'இவையெல்லாம் எனது பொறுப்பிலில்லை; எனது உதவியாளரே கவனித்து வருகிருர்' என்று ரவிமீது குற்றஞ் சாட்டியதும், அந்த அதிகாரியின் கேள்விக்கணை களால் தான் திக்குமுக்காடிப் போனதும் நிழற்படம் போல் ரவியின் கண்முன்னே தோன்றின. சேமிப்புக் குதத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களின் அளவிற்கும் அப்பொழுது அதிலிருந்த பொருட்களின் அளவிற்கும் பெரும் வித்தியாசம் இருந்ததைச் சுட்டிக் காட்டி அந்த அதிகாரி ரவியை வேலையிலிருந்து நீக்கப் போவதாக மிரட்டியதையும் தான் வீட்டிற்கு அனுப்ப வென வைத்திருந்த சம்பளப் பணத்தை அதிகாரியின் கையில் திணித்ததும் அவர் அடங்கிவிட்டதை எண்ணிப் பார்த்தபோது அவனின் நெஞ்சம் குமுறியது.

ரவி மீண்டும் யன்னல் திரையை விலக்கிப் பார்த்தான். கார் புறப்பட ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. தருமலிங்கமும் சிவப்பிரகாசத்துடன் போகப்போகிருர் போலும்; அவரும் காரில் அமர்ந்திருந்தார். உடனே போய்க் கையோடு சிவப்பிரகாசத்திடம் பணத்தை வாங்கி வராவிட்டால் அவருக்கு அன்றிரவு நித்திரை வராது. கார் கண்ணிலிருந்து மறைந்ததும் ரவி திரையை மூடிவிட்டு வெளியில் வந்தான். வெளியே பரந்த பசும் நிலப்பரப்பில் நாட்டின் முதுகெலும்புக ளான இளைஞர்கள் கஷ்டப்பட்டு உழைத்துக்கொண் டிருந்தனர். ரவி கையாடிவிட்டதாலும் விளைச்சல் குறைந்ததாலும் அவர்களுடைய சம்பளத்தில் ஒரு பகுதி குறைக்கப்பட்டுவிட்டதாகத் தருமலிங்கம் சென்ற மாதம் அறிவித்தபொழுது குமுமியிருந்த நூற்றறு

பது இளைஞர்களும் ரவியைத் திட்டித் தீர்த்தனர். இப்பொழுதும் ரவியைத் திட்டியபடியே ஆர்வத்துடன் வேலை செய்துகொண்டிருந்தனர்.

ரவி அனைவரையும் அழைப்பித்து அவர்களிடம் நடந்ததைக் கூறியபொழுது முதலில் அனேகர் ரவியின் கூற்றை நம்பவில்லை; ஆனால், ரவி மனந்திறந்து எல்லோர் முன்பும் பேசியதும் முற்றாக நம்பினார்கள். 'இதற்கு என்ன செய்யலாம்?' இது ரவியின் கேள்வி. கூடியிருந்த அனைவரும் பரிசோதனை அதிகாரியிடம் முறையிடுவோம் என்றனர். பரிசோதனை அதிகாரிகள் யார் கூட இலஞ்சம் கொடுக்கிறார்களோ அவர்கள் பக்கம் சாய்வார்கள் என்ற உண்மை இளைஞர்களுக்குத் தெரிந்திருந்தாலும் தப்பித்தவறி நீதி கிடைக்காதா ......என்ற நப்பாசைதான்.

ரவி உடனேயே தொலைபேசிமூலம் நகரிலிருந்த பரிசோதனை அதிகாரிக்கு விடயத்தைக் கூறி உடனே வரும்படி கேட்டுக்கொண்டான். அவரும் உடனே புறப்பட்டு வந்திருப்பார். ஆனால், அப்பொழுது அவரின் வீட்டில் தருமலிங்கம் அவருக்கு முன்னால் இருந்து கதைத்துக்கொண்டிருந்தார். தொலைபேசித் தொடர்பை அடுத்துத் தருமலிங்கத்தின் கையில் இருந்த இருநூறு ரூபாய் அதிகாரியின் சட்டைப்பையினுட் தஞ்சம் புகுந்தது. ரவி இதிலும் கூடுதலாக லஞ்சம் தந்தால் அவனுக்குச் சார்பாக நடவடிக்கை எடுப்போம் என எண்ணமிட்டவராகக் குடியேற்றத் திட்டத்தை நோக்கி விரைந்தார் அதிகாரி. ஆனால், ரவியிடம் அவ்வாறு கொடுக்கப் பணம் ஏது?......அவன் பணத்தை அந்த வழியிற் சேர்க்கவில்லையே!...—இதனால் வந்திருந்த அதிகாரி 'நீ வேண்டுமென்றே தருமலிங்கத்தின் மீது ஆதாரமற்ற குற்றஞ் சாட்டுகிறாய்' என்று எச்சரித்து விட்டுத் திரும்பினார். அவருக்குத் தருமலிங்கத்திற்கு விசுவாசமாக நடந்துகொண்

போமேயென்று ஒரு புறம் திருப்தி; மறுபுறம் ரவியிடமிருந்து கொஞ்சமுங் கிடைக்கவில்லையே என்று அதிருப்தி. தனது உத்தியோகத்திற்கு விசுவாசமாக நடக்கவேண்டுமே என்பதைப்பற்றி அவருக்கென்ன கவலை.

மீண்டும் அதே நாடகம். அன்று அந்தப் படகுக்கார்- அதுதான் சிவப்பிரகாசத்தினுடைய கார் - மீண்டும் வந்திருந்தது. 'உழைப்பவர்களே நாட்டின் முதுகெலும்புகள்; அவர்களின் முயற்சிக்காகவே நான் பாடுபடுகிறேன்' என்று கூறிக்கொண்டே அவர்களுக்கு கொள்ளிவைக்கும் சிவப்பிரகாசமும் அதற்குஉடந்தையாக அவருடன் தோளோடு தோள் நின்று உழைக்கும் தருமலிங்கமும் அன்றும் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிச் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். ரவி இளைஞர் சிலரை ஆங்காங்கே மறைவிடங்களிலிருந்து காரை அவதானிக்கும்படி அறிவித்திருந்தான்.

திடீரென ஒருவன் ஓடிவந்து ரவியிடம், காரில் ஏதோ ஒரு மூடை ஏற்றப்பட்டதென்றும் அநேகமாக அது மிளகாயாகத்தான் இருக்கவேண்டுமென்றதும் ரவி எச்சரிக்கையடைந்தான். விடயம் காட்டுத்தீபோல் இளைஞர் மத்தியில் பரவியது. எல்லோரும் உடன் விரைந்து காரை நோக்கி வந்துகொண்டிருந்தனர். ரவி காரின்முன் நின்றுகொண்டான். காரில் புறப்பட ஆயத்தமாக இருந்த தருமலிங்கமும் சிவப்பிரகாசமும் திடுக்கிட்டனர். 'திருடன் தருமலிங்கமே' என்ற ஒலி காதில் விழுந்ததும் தருமலிங்கம் உசாராகினார். சிவப்பிரகாசத்திடம் 'விரைவாகக் காரை வெளியில் எடுங்கள்' என்று கதறினார். சிவப்பிரகாசமும், சூழ்ந்துவரும் இளைஞர்கள் தம்மை நெருங்கிவிட்டால் தம் கதி என்னகும் என்று சிந்தித்தார். அவ்வளவுதான். கார் ஒருமுறை பின்னேக்கிச் சென்று திடீரென முன்னேக்கிப் பாய்ந்தது. தான் காரின் முன்னல் வழிமறித்து நின்ருலும் அவர்கள் காரை நிறுத்திவிடப் போவதில்லை. தன்னை மோதித் தள்ளிவிட்டுத்தான்

செல்வார்கள் என்பதை உணர்ந்த ரவி சட்டென விலகுவதற்கும் சிவப்பிரகாசத்தின் கார் அவனைத் தாண்டிப் பறப்பதற்கும் சரியாக இருந்தது. இளைஞர்கள் எல்லோரும் பெருஞ் சத்தத்துடன் சிறிதுதூரம் காரின்பின் ஓடினர்.

ரவி உடனடியாகத் தொலைபேசியை நோக்கி ஓடினான். அங்கிருந்து மூன்றுமைல் தொலைவிலுள்ள பொலீஸ் நிலையத்திற்கு விடயத்தை அறிவித்தான். கார் பொலீஸ் நிலையத்தின் முன்னாலுள்ள பாதையால் தான் செல்லவேண்டும்.

சிவப்பிரகாசத்திற்கு ரவி உடனே பொலிசுக்கு அறிவிப்பானெனத் தெரிந்திருந்த போதிலும் அதிலிருந்து தப்பும் வழிவகையும் அவருக்குத் தெரியாமலில்லை. அவர் எதிர்பார்த்தது போன்றே பொலிஸ் நிலையத்தின்முன் அவரது காரை மறித்த பொலிஸ் உத்தியோகத்தர் காரினுள் சிவப்பிரகாசத்தைக் கண்டதுமே அத்தனை பற்களும் தெரிய இளித்தார். அந்த இளிப்பின் அர்த்தம் சிவப்பிரகாசத்திற்குப் புரியாமலா இருக்கும்? சட்டைப் பையினுள் இருந்து நீலத்தாள் ஒன்று கைமாறியது. உத்தியோகத்தரின் காதினுள் ஏதோ கூறிவிட்டுப் பறந்தார் சிவப்பிரகாசம். அடுத்த நிமிடம் ரவியின் அறையில் தொலைபேசி ஒலித்தது —— தொலைபேசியிற் பேசிய பொலிஸ் உத்தியோகத்தர் ரவியைக் கண்டபடி திட்டித் தீர்த்தார். விரக்தியடைந்த ரவி சுவரில் மாட்டியிருந்த முருகன் படத்தை ஏக்கத்துடன் நோக்கிக்கொண்டே கட்டிலிற் சாய்ந்தான்.

சிவப்பிரகாசத்தின் மனநிலைக்கேற்ப என்றுமில்லாத வேகத்தில் கார் பறந்துகொண்டிருந்தது. காரின் டிக்கியில் இருந்த மிளகாய் மூட்டை அவரை அவ்வாறு பதட்டத்துடன் பறக்க வைத்தது. அப்போது

தானு அந்த நிகழ்ச்சி நடக்கவேண்டும். என்றுமில்லாத வேகத்தைக் கண்டு அதிர்ச்சியுற்ற அவரது நாய் இருந்தாற்போற் சிவப்பிரகாசம் மீது பாய அவர் திடுக்கிட்டு ஒரு கணநேரம் ஸ்தம்பிக்க எல்லாம் கண் மூடிக் கண் திறப்பதற்குள் நடந்துவிட்டன. கார் அதல பாதாளத்தில் உருண்டுகொண்டிருந்தது. பசுக்களுக்கு ஆவி உருவங்கள் தெரியும் என்று கூறுவார்கள். அக் காட்சியை ஒரு பசு கண்டிருந்தால் மூன்று ஆவிகள் மேல்நோக்கிச் செல்வதை நிச்சயமாகக் கண்டிருக்கும். சிவப்பிரகாசத்தை விட்டு ஒரு கணமும் பிரிந்திருக்காத அவரது நாய் சாவிலும் அவரை இணைபிரியவில்லை.

# வாழ்வின் மாயைகள்

ம. தியாகராம்

சலசலத்து ஓடிவரும் சிற்ருற்றின் ஓசையையும் கூட்டமாய்ப் பறந்து சென்று சத்தமிடும் பட்சிகளின் ஓசையையும் தவிர அங்கு அமைதியே குடிகொண்டிருந்தது. தன் இடையை வளேத்து நெளித்துக் குதித்தோடும் பருவப் பெண்ணைக் காட்சியளித்தது அந்தச் சிற்ருறு. ஆற்றின் கரையில் - ஆற்றில் பாதி அமிழ்ந்தும் அமிழாததுமாக இருக்கும் அப்பாறையின் படிகள் போல் அமைந்துள்ள பகுதிகளில் அருவியின் பொங்கி வரும் பிரவாகத்தின் புதுநீர் பாய்ந்து ஓர் நளினமான இசையைக் கொடுத்துக்கொண்டிருந்தது. மாலைச் சூரியனின் மஞ்சள் நிறக் கதிர்கள் தெறித்து விழும் அருவி நீரைப் பொன்மயமாக்கின. தூரத்தே தெரியும் அழகிய கிராமமும், கிராமத்தின் குன்றுகளின் மேல் பாம்புபோல் வளைந்து நெளிந்து செல்லும் பாதைகளும் பார்ப்பதற்குப் புத்துணர்ச்சியைக் கொடுப்பதாக இருந்தன. ஆற்றின் நடுவிலும் கரையிலுமாகப் பல பாறைகள் அமைந்திருந்தன. அவற்றில் ஒரு பாறையில் தலையைக் கவிழ்த்தவாறு ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். மனித மனத்தைக் கொள்ளைகொள்ளும் காட்சிகளின் நடுவே களையிழந்த முகத்துடன் அவன் அமர்ந்திருந்தான். அவன் முகத்தில் எவ்வித சலனமும் இல்லை. கழுத்தில் தொங்

கிய சிலுவையிலிருந்து அவன் கிறீஸ்தவனுக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொள்ளலாம். அவன் மனம் சிந்தனையில் ஈடுபட்டிருந்தது. ஆனுல், முகம் எவ்வித உணர்ச்சிகளையும் காட்டவில்லை. உணர்ச்சிகளுடன் கூடிய சிந்தனைகள் அவன் மனத்தை விட்டே அகன்றுவிட்டன. அவன் மனம் ஒருவித வரட்சியுடன் பழைய நினைவுகளை, நேற்றுவரை நடந்த நிகழ்ச்சிகளை அசைபோட்டது.

அலோசியஸ் - அதுதான் அவனுடைய பெயர்; ஏழைக் குடும்பத்திற் பிறந்தவன். அவனது அறியாப் பருவத்திலேயே தாயிடம் முழுப்பொறுப்பையும் அளித்துவிட்டுக் கொடுமை மிக்க இந்த உலகை விட்டு நீங்கிச் சென்ருர் அவனது தந்தை. அன்றிலிருந்து தந்தைக்குத் தந்தையாகவும் தாய்க்குத் தாயாகவும் இருந்து அவனை வளர்த்தது அவனது தாய்தான். தந்தையின் முகத்தைக்கூட நன்ருக அறியாத அலோசியசுக்குத் தாய்தான் அனைத்துமாக இருந்தாள். தந்தை சேர்த்து வைத்துவிட்டுச் சென்ற சிறிதளவு சொத்தும் நிலங்களும் அவர்களுக்கு உதவியாயிருந்தன. இதற்கிடையில் அவன் தாய் அன்னம், ஒரு செல்வந்தரின் வீட்டில் வேலைக்காரியாக அமர்ந்தாள். இதனுல் அக் குடும்பம் வறுமையின் கொடிய பிடியிலிருந்து சிறிது தப்பிக்கொள்ள வழி பிறந்தது. அன்னம் அவனை அக்கிராமத்திலுள்ள ஓர் பள்ளியிற் சேர்த்தாள். அலோசியசும் திறமையாகப் படித்துப் பத்தாம் வகுப்பிற்கு வந்துவிட்டான். அவனது தாயும் தான் வேலைசெய்யும் கொட்வின் என்ற செல்வந்தரின் வீட்டில் விசுவாசமாக நடந்துகொண்டமையால் அக் குடும்பத்தினருள் ஒருத்தியாகவே மாறிவிட்டாள். கொட்வினின் மகள் மேரி எந்த நேரமும் அன்னத்துடனேயே ஒட்டிக்கொண்டிருப்பாள்.

அன்னம் கத்தோலிக்கப்பெண். ஆனுல், கொட்வினே கிறீஸ்தவர். அவர்களுக்குள் மதவேறுபாடும், சமூக

ஏற்றத்தாழ்வுகளும் இருந்தபொழுதிலும் கொட்வின் அன்னத்தைத் தமது சகோதரிபோலவே கருதி வந்தார். அவளுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்ததோடு அவளது மகன் அலோசியசுக்கும் படிப்பதற்கு உதவி புரிந்தார். அவரது மகள் மேரி நகரத்திலுள்ள பெரிய கல்லூரியொன்றிற் படித்துக்கொண்டிருந்தாள். கிராமப்பள்ளியிற் படித்துக்கொண்டிருந்த அலோசியசையும் அவரே முயற்சி செய்து நகரத்துக் கல்லூரியிற் சேர்த்தார். அலோசியசும் நல்ல கெட்டிக்காரன். கொட்வினின் கருணையால் வறுமையின் கோரப்பிடியிலிருந்து தப்பி நன்றாகவே வாழ்ந்து வந்தான். படிப்பில் அவனை மிஞ்ச வகுப்பில் யாருமில்லை. எல்லாப் பாடங்களிலும் அதிக புள்ளிகள் பெற்று ஆசிரியர்களின் பாராட்டுதல்களையும் பெற்றான். இறுதியில் பத்தாம் வகுப்பு அரசாங்கப் பரீட்சையில் அந்தப் பெரிய கல்லூரியே வியக்கும் வண்ணம் அவன் சித்தியடைந்தபொழுது அவனது தாயிலும் மகிழ்ச்சி அடைந்தவர் கொட்வின்தான்.

அலோசியசின் பாடசாலைக்குப் பக்கத்தில் இருந்த பெண்கள் பாடசாலையிலேயே கொட்வினின் மகள் மேரி படித்துவந்தாள். அலோசியஸ் பத்தாம் வகுப்புப் பரீட்சை எடுத்த அதே வருடம்தான் மேரியும் பரீட்சை எடுத்தாள். அலோசியசைப்போல் மிகத் திறமையாகச் சித்தியடையவில்லையாயினும் உயர்வகுப்பிற்குப் போகக்கூடிய அளவு அவளும் சித்தியடைந்தமையால் இருவரையும் அந்த நகரின் மிகச் சிறந்த கல்லூரியொன்றிற் சேர்த்தார் கொட்வின்.

அவர்களின் அதிட்டமோ, துரதிட்டமோ தெரியவில்லை, இருவரும் ஒரே வகுப்பிலேயே சேர்க்கப்பட்டனர். இவ்வளவு காலமும் அவர்களிருவரும் சந்திப்பதற்கோ, பேசுவதற்கோ அதிக வாய்ப்பு இருக்கவில்லை. ஏனெனில், அலோசியஸ் அதிகமாக மேரியின் வீட்டிற்

குப் போவதில்லை. கொட்வின் ஏதும் தேவைக்காகக் கூப்பிட்டிருந்தாலொழிய அவன் அங்கு போகமாட்டான். போனாலும் தன் காரியம் முடிந்தபின் திரும்பி விடுவான். ஆகையால் மேரியும், அலோசியசும் சந்தித்ததுமில்லை. அதை அவனோ அவளோ எதிர்பார்த்ததுமில்லை; ஆனால், இப்பொழுது ஒரே வகுப்பில் இருப்பதால் வகுப்புத் தோழர்களென்ற முறையில் அவர்கள் பேசிக்கொண்டார்கள். சிலவேளைகளில் மேரியின் வீட்டிலிருந்து அவளை அழைத்துக்கொண்டு போகக் கார் வரவில்லையெனின் அலோசியஸ் தானே அவளை வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு வருவான்.

அலோசியஸ் நல்ல அழகன். அகன்ற அவனது நெற்றியும், ஆழ்ந்த சிந்தனைக்குரிய சுடர்விடும் அமைதியான முகமும், எதையும் அவசரப்படாமல் ஆழ்ந்து சிந்திக்கும் மனப்போக்கும் எல்லோரையும் இலகுவில் கவரக்கூடியவை. அவன் தேவையில்லாமல் அதிகமாகப் பேசமாட்டான். பேசினானெனின் அவனது பேச்சில் அறிவொளி வீசும். கூர்மையான பார்வை அவனது அகன்ற கருவிழிகளுக்குப் புது மெருகூட்டும். மொத்தத்தில் அவனது அழகும் - சுபாவமும் எல்லோரையும் கவரக்கூடியதாக இருந்தன. அவனது இனிமையான சுபாவத்தில் மேரி தன் மனதைப் பறிகொடுத்ததில் வியப்பில்லை.

மேரியும் அழகானவள்தான். அவள் ஆடம்பரத்தை அதிகம் விரும்பாதவள். ஆடம்பரமாகத் திரியக்கூடிய எல்லா வசதிகளும் இருந்தும் எளிமையாகவே இருந்தது அவளது அழகிற்கு அழகூட்டியது. அவளது பணிவும் அடக்கமும் ஊரிலும் கல்லூரியிலும் அவளைப்பற்றி நல்லெண்ணத்தை உண்டாக்கின. உயர்நிலைப்பள்ளியில் மேரியோடு அடிக்கடி பேசிப் பழகும் சந்தர்ப்பம் அலோசியசுக்குக் கிடைத்ததால் அவளது எளிமையான அழகும், இனிமையான சுபாவமும் அவனைக் கவர்ந்தன. நாட்கள் செல்லச்செல்ல உறுதியான தன் மனம்

மேரியின்பால் நழுவிச் செல்வதை அவனே புரிந்து கொண்டான். மேரியும் தன்மீது அன்புடையவள் என்பதை உணர்ந்ததால் தனது மனத்தின் போக்கை நிறுத்திப் பிடித்துக் கடிவாளமிட அவன் விரும்பவில்லை. இவ்வாறு அவர்களுக்கிடையில் அன்பு வளர்ந்தது. எனினும் தங்களன்பிற்கு இடையூறாக இருக்கும் மதவேறுபாட்டினையும் சமூக ஏற்றத்தாழ்வுகளையும், அவர்கள் உணராமலில்லை. முக்கியமாக, அலோசியஸ் இதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்தான்; ஆனால், மேரி இப்பிரச்சனைகள் எழா என்று கூறிச் சமாதானப் படுத்திவிட்டாள். இப்படியிருந்தும் இவர்கள் இருவரும் இவ்வளவு அந்நியோன்னியமாகப் பழகும் விவகாரம் அன்னத்திற்கோ அல்லது கொட்வின் வீட்டாருக்கோ தெரியாமலேயே இருந்தது.

அன்னம் தன் மகனைப்பற்றி இன்பக்கனவு கண்டு கொண்டிருந்தாள். தனது ஒரே மகனின் எல்லாத் தேவைகளையும் கவனித்துக்கொள்வாள். அவனது படிப்பிற்கு இடையூறு இருக்கக்கூடாதென்பதற்காகக் கடைக்குச் செல்வது முதல், மகனுக்குப் படுக்கை விரித்துக் கொடுப்பதுவரை தானே ஏற்றுச் செய்து கொடுப்பாள். அலோசியசும் தன் தாயிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தான். தாயையே தன் தெய்வமாகப் பூசித்து, அவளின் மனத்தை மகிழ்விக்கத் தன்னால் இயன்றதை எல்லாம் செய்தான். காலையில் படுக்கையில் இருந்து எழுந்ததும் ' அம்மா ' என்ற வார்த்தை தான் அவன் வாயில் உதிக்கும். அதற்காகவே காத்திருந்தது போன்று அன்னம் கோப்பியை அவனிடம் கொண்டுபோய்க் கொடுப்பாள். இருவரும் ஒருவர்மீதொருவர் கொண்டிருந்த பாசத்தை வர்ணிக்க வார்த்தைகளே கிடையா.

அலோசியசின் வாழ்வில் பேரிடி விழும் நிலையும் ஏற்பட்டது. அவர்களது கிராமத்தில் பரவிய மலேரியாக் காய்ச்சலின் கோரப்பிடிக்குள் அலோசியசின்

அன்னை அன்னம்மாவும் சிக்குண்டாள். அலோசியஸ் தடுமாறினுன். கிராமத்தில் வைத்தியவசதி கிடையாது; நகரத்திலும் செலவு அதிகம். அலோசியசால் எதுவும் செய்ய முடியவில்லை. மூன்று நாட்களாக அன்னம் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். அன்னத்தின் சுகவீனத்தைப் பற்றிக் கேள்வியுற்ற கொட்வின் அன்னத்தின் வீட்டிற்கு வந்தபொழுது அங்கு அவர் கண்ட காட்சி நெஞ்சை உருக்கியது. நோயிற் படுத்திருந்த அன்னம்மாவிற்குப் பக்கத்தில்: அலோசியஸ் கலங்கிய கண்களுடன் அமர்ந்திருந்தான். கொட்வின் உடனே அன்னம்மாளையும் அலோசியசையும் காரில் ஏற்றிக்கொண்டு நகரத்து வைத்தியசாலைக்கு விரைந்தார். தனது தாய் சுகமடைவாள் என்பதில் அலோசியஸ் அசையாத நம்பிக்கை வைத்திருந்தான். ஆனுல், ஆண்டவன் அவளை இவ்வுலகில் விட்டுவைக்க விரும்பவில்லைப்போலும். நகரத்தில், பெரிய வைத்தியர் அன்னத்தைச் சோதித்துவிட்டுக் கையை விரித்தபொழுதுதான் உண்மைநிலை புரிந்தது. அலோசியஸ் தன் அன்னையையே பார்த்துக்கொண்டிருந்தான். திடீரென்று அவள் கண் விழித்தாள். தனது மகனை ஆசையோடு நோக்கினுள். பின் அவள் கொட்வினைப் பார்த்த பார்வையில் நன்றி தொனித்தது. இறுதியாகத் தன் மகனை மீண்டும் ஒருதடவை நோக்கிச் சோகம் கலந்த புன்னகை பூத்தாள். அப் பார்வையில் அணையப்போகும் தீபத்தின் இறுதிப்பிரகாசம் தெரிந்தது. பின் அவள் கண்கள் நிரந்தரமாக மூடிக்கொண்டன. அலோசியஸ் அழுதான்; அரற்றினுன்; கதறினுன். என்னபயன்...? மாண்டவர் மீண்டு வருவாரோ...?

அதன்பின் நடந்த நிகழ்ச்சிகள், சடங்குகள் அனைத்தும் அவன் மனதில் தெளிவாக இல்லை. நேற்று மாலை அவள் புதைக்கப்பட்டாள். அப்பொழுது அவன் மனம் பட்டபாடு——ஐயோ!...... அதனை வார்த்தைகளால் கூறமுடியாதே...... தன்னைப் பெற்றுக் கண்ணுக்குக் கண்ணுக வளர்த்த அருமைத் தாய் மண்

ேேடு மண்ணேய்ப் போவதை எப்படித்தான் சகித்தானே!...... அன்று இரவு முழுவதும் அழுது தீர்த்தான். இன்று அவனுல் அழ முடியவில்லே. இந்த ஆற்றங்கரையில்தான் முழுநாளும் அமர்ந்திருக்கிறுன். அவன் தலே இன்னும் தாழ்ந்திருந்தது.

கடந்தகாலச் சிந்தனேகளில் — நேற்றுவரை நடந்த நிகழ்ச்சிகளில்—மனதைச் செல்லவிட்டுக் கவலேயே உருவாக அமர்ந்திருந்த அலோசியஸ் நிமிர்ந்து நோக்கினுன். கொடுமைமிக்க இவ்வுலகைக் காண அஞ்சியவன் போல் கதிரவன் மேற்கு வானில் மறைந்துகொண்டிருந்தான். அலோசியஸ் வீட்டிற்குத் திரும்பினுன்.

மூன்ரும் நாள் அவன் பாடசாலேக்குச் செல்லத் தொடங்கி விட்டான். அவனுல் வீட்டிலிருந்து பொழுதைக் கழிக்க முடியவில்லே. பாடசாலேயில் தனது அதிபரிடமிருந்து சிபார்சுக் கடிதம் வாங்கிக்கொண்டு ஏதாவது வேலே தேடுவதற்கே அவன் உத்தேசித்திருந்தான். பாடசாலேயை நோக்கிச் சென்ற பொழுது 'அலோசியஸ்' என யாரோ அழைப்பது கேட்டு நிமிர்ந்தபொழுது அங்கே மேரி நின்றுகொண்டிருந்தாள். அப்பொழுது அவன் குறைகளேக் கேட்டுத் துக்கத்தைப் பகிர்ந்துகொள்ள அவளேத் தவிர வேறுயாருமில்லே.

மேரி அவனே அழைத்துக்கொண்டு நகரப் பூங்காவிற்குச் சென்ருள். அதுவரையும் அவர்கள் இருவரும் எதுவும் பேசவில்லே. பூங்காவிற்கு வந்ததும் ஒரு ஆசனத்தில் இருவரும் அமர்ந்தனர். தனது துயரத்தையெல்லாம் கூறி அழுதான் அலோசியஸ். அவன் அவளுக்கு தேறுதல் கூறினுன். அன்று முழுவதும் அவர்கள் பேசிக்கொண்டேயிருந்தனர்.

ஒருநாள்...... ஒரு வாரம்...... என ஒரு மாதம் கடந்தது. அதுவரையில் அலோசியசுக்கு எங்கும் வேலே கிடைக்கவில்லே. அவனும் மேரியும் நாள் தவ

ருமல் பூங்காவில் சந்தித்தனர். மேரியினது அன்பால் தனது தாயின் பிரிவை அவனுல் ஓரளவு மறக்க முடிந்தது. இந்த ஒரு மாதமும் அவளுக்காகவே அவன் உயிர் வாழ்ந்தான் என்று கூறலாம். இப்படி இருக்கையில்தான் அலோசியசும் மேரியும் பூங்காவில் சந்தித்துப் பேசும் தகவல் கொட்வினுக்குத் தெரியவந்தது. அவர் அதனைச் சிறிதும் விரும்பவில்லை. அவர் அலோசியசை அவன் குணத்திற்காக விரும்பினுர்; எனினும் மத, சமூக வேறுபாடுகளைக் கடந்து அவனை மருமகனுக்கிக் கொள்ளும் துணிவு அவரிடமில்லை. அவர் மேரியிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்; ஆனுல் அவள் தன்னுல் அலோசியசை மறக்க முடியாதெனத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டாள். அவருக்குத் தனது கௌரவத்தைக் காப்பதற்கு வேறு வழி எதுவுமே தோன்றவில்லை. இறுதியாக வேறு மணுளனைத் தேடிச் சீக்கிரமாக மேரியின் திருமணத்தை முடித்துவிட எண்ணினுர். தாமதிக்காமல் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

நடக்கப்போகும் விபரீதத்தை அறிந்த மேரி மறுநாளே அலோசியசிடம் எல்லா விபரங்களையும் பூங்காவில் வைத்துக் கூறிவிட்டாள். அலோசியசைத் தவிர வேறு யாரையும் தன்னுல் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதென உறுதியாகக் கூறினுள். அலோசியஸ் அவளையும் அழைத்துக்கொண்டு கொட்வினின் வீட்டுக்குச் சென்முன். கொட்வினிடம் பேசி அவர் மனதை மாற்றிவிடலாம் என்ற நப்பாசை அவனிடம் இருந்தது; ஆனுல், அவர் அவனிடம் எவ்வளவு சீற்றம் கொண்டுள்ளாரென்பதை அங்கு சென்றபொழுதுதான் கண்டான்.

மேரியுடன் அவனைக் கண்டவுடனேயே கொட்வினின் ஆத்திரம் எல்லை கடந்தது. தன் மகளின் மனத்தைப் பாழாக்கி அவளது எதிர்கால வாழ்வைப்பற்றித் தான் கண்ட கனவுகளைச் சிதைத்த அலோசியசை

இப்பொழுது அவர் அடியோடு வெறுத்தார். 'வேற்று மதத்தவனுக்கா என் மகளை மணமுடிப்பது?...... அது வும் என் வேலைக்காரியின் மகனா எனக்கு மருமகனாகப் போகிறான்?' என்ற கேள்விகள் அவர் மனதில் எழுந் தன. அவர் ஆத்திரமெல்லாம் அலோசியசின் மேலேயே திரும்பியது. அவனைக் கண்டதுமே அவருக் குக் கோபம் பொங்கியது. அத்தோடு அவன் தன் மகளுடன் வருவதைப் பார்த்ததும் அவரால் பொறுக்க முடியவில்லை. அவர்கள் முன்வாசல் கதவைத் தாண்டி வருமுன்பே வழியில் வந்து அவர்களைத் தடுத்தார். அலோசியசை இயன்றவரை சுடுசொற்களால் தாக் கினார். வேலைக்காரியின் மகன்தானே இவன் என்ற ஏளனம் அவர் பேச்சில் தொனித்தது. அவருடன் பேசிப் பயனில்லை; விட்டகன்றான் அலோசியஸ். இவ் வளவு நல்ல மனிதரே வரட்டுக் கௌரவத்திற்காகச் செயற்படத் தொடங்கி விட்டார் என்ற உண்மை அவனுக்குத் தெளிவாக விளங்கியது.

அன்று முழுவதும் மேரிக்கு ஒரே அழுகைதான். அவளது தந்தை இனிமேல் அவள் எங்கும் போகக் கூடாதென்று தடை போட்டுவிட்டார். அவளைப் பெண் பார்க்கப் பொறியியலாளர் ஒருவர் வரப்போகி றார். அவளால் பொறுக்க முடியவில்லை. அலோசிய சைத் தவிர வேறு யாருடனும் வாழ அவளுக்குத் துணிவில்லை. அத் துணிவை வரவழைத்துக்கொள்ள வும் அவள் விரும்பவில்லை. இன்னும் ஓர் இரவுதான் இருந்தது. அவள் விரைந்து செயற்பட்டாள். ஒன்று— இரண்டு......—மூன்று......பத்துத் தூக்க மாத்திரை களின் உதவியுடன் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

செய்தியறிந்த அலோசியஸ் கதறினான். அவனால் எதுவும் செய்ய முடியாது. தாயின் பிரிவை மறப்ப தற்கு முன்னர் இன்னொரு வேதனையா? இதனை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எப்படித்தான் அவ் வளவு விரைவாக அவள் வீட்டை அடைந்தானோ

தெரியவில்லை ........ அங்கு அழகிய வேலைப்பாடு அமைந்த பெட்டியில் அமைதியாக உறங்கிக் கொண் டிருந்தாள் மேரி. அவனால் அழக்கூட முடியவில்லை. அழும் நிலையைக் கடந்திருந்தான் அவன். பாதிரியார் ஒருவர் எல்லாச் சடங்குகளையும் செய்து முடித்தார். மேரியும் ஓர் குழியினுள் புதையுண்டாள். அலோசிய சின் சித்தம் கலங்கியது. அப்பொழுது அவனது மன நிலையைப் புரிந்துகொண்டவர் ஒருவர் உண்டெனில் அது அந்தப் பாதிரியார்தான். அவனது மனக்கலக் கத்தைப் போக்க விரும்பிய அவர், எல்லோருஞ் சென்றபின் தனியே நின்றுகொண்டிருந்த அலோசிய சிடம் பைபிளைக் கொடுத்துப் படிக்கும்படி கூறிவிட் டுச் சென்றுவிட்டார்.

அலோசியஸ் மனதிற்குள் சிரித்துக்கொண்டான். இருப்பினும் ஓர் அற்ப ஆசை, ஒரு வெறி அவனுள் தோன்றியது. இரவு முழுவதும் இடுகாட்டில் எரிந்து கொண்டிருந்த மங்கிய விளக்கின் ஒளியில் பைபிளைப் படித்துக்கொண்டேயிருந்தான். நள்ளிரவு வந்தது. அவனது மனப்பிரமையோ அல்லது பிரார்த்தனையின் பலனோ தெரியவில்லை...... உடல் சிலிர்த்தது. என்று மில்லாத ஓர் உணர்வு உள்ளம் முழுவதையும் ஆட் கொண்டது. பக்கத்துப் புதைகுழியிலிருந்த சிலுவை அசைவதுபோல் அவனுக்குத் தோன்றியது. அலோசி யஸ் மயங்கிச் சாய்ந்தான். அத்தோடு 'மேரீ...ஈ...ஈ' என்று அவன் அலறல் இருளைக் கிழித்துக்கொண்டு கேட்டது. ஆந்தை அலறியது. எங்கோ ஒருமாதா கோயில் மணி பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது.

மறுதினம் இரண்டாம்நாள் சடங்கிற்காகப் பாதிரி யாருடன் வந்த கொட்வின் பக்கத்துக் கல்லறையி லுள்ள சிலுவையில் அடிபட்டு மண்டை உடைந்து அலோசியஸ் ஆழ்ந்து உறங்குவதைக் கண்டார். அவருக்குப் புரியவில்லை வாழ்வின் மாயைகள்.

---

# சகடக்கால்

செல்வி அ. புவனேஸ்வரி

வாசற்படியில் அமர்ந்து தெருவீதியை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் தாரிணி. அந்தி சாயும் வேளை; தெருப் பிள்ளைகளின் அமளி; மாலைவேளை பாற்காரனின் சைக்கிள் மணியோசை; இவ்வளவும் இருந்தும் இவற்றில் ஒன்றுகூட அவளது சிந்தனையைக் கலைக்கவில்லை. வெறித்த பார்வை வெறித்தபடி இருக்கத் துன்பசாகரத்தில் அமுங்கி வெளியேறிய பெருமூச்சினால் நெஞ்சு ஒருமுறை விம்மித் தாழ்ந்தது. எண்ணமோ அவளது பழைய ஞாபகங்கள், கற்பனைகள், அபிலாஷைகள் என்பவற்றை வட்டமிட்டது.

வீட்டிற்குள் இருந்து யாரோ மூச்சுத் திணறியபடி இருமினார். அவர்தான் தாரிணியின் மாமா. ஆம்! பெற்ற பிள்ளையிலும் மேலாகப் போற்றி வளர்த்தவர். தன் கையால் சாதம் பிசைந்து ஊட்டிப் பாடசாலைவரை சைக்கிளில் ஏற்றிச் சென்றவர். அவளது வாழ்க்கையில்தான் எத்தனை மாறுதல்கள், தாயாரின் செல்லப் பிள்ளையாக மூன்று வயதுவரை வளர்ந்தாள். அவளது அப்பா, காட்டு இலாகா உத்தியோகத்தர். நாவலப்பிட்டியில் வேலையாக இருந்தார். கலியாணம் செய்து ஆறு வருடங்கள் மழலையின் அன்பை எண்ணி ஏங்கினார்கள். அந்த ஏக்கத்திற்கு ஈடு செய்

யும் வகையில் தாரிணிமேல் அன்பாகச் சொரிந்தார்கள். அம்மம்மா, சித்தி, மாமா எல்லோருமே அவளில் அன்பாக இருந்தார்கள். அப்பொழுது அவள் யாழ்ப்பாணத்திற் படித்து வந்தாள். முதலாம் வகுப்பு; எல்லாரிலும் முதலாவதாக வருவாள். இதன் காரணமாக ஏற்பட்ட ஆசிரியரின் அன்பு; மாணவர்கள் அவளிடம் காட்டும் மதிப்பு; விடுதலைக்கு நாவலப்பிட்டிக்குச் சென்றால் அப்பா காட்டும் பாசம் யாவுமே அவளை ஓர் அற்புத உலகிற்கு அழைத்துச் செல்லும்.

திடீரென ஒருநாள் தபாற்காரர் கொண்டுவந்த கடிதம் வீட்டில் பூகம்பத்தை ஏற்படுத்தியது. கண்ணீர் மாலைகள் கன்னங்களில் தவழ்ந்தன. அப்பொழுது வைகாசி மாதம். வெய்யிற் காலமாதலால் அம்மம்மா தாரிணியை அழைத்துவரப் பாடசாலைக்கே வருவார். இடுப்பில் அவளையும் ஒரு கையில் புத்தகத்தையும் மறு கையில் குடையையும் சுமந்துகொண்டு வருவார். அம்மா அப்பொழுது தாரிணிக்கு ஒரு 'தம்பிப்பாப் பார்வை'த் தருவதற்காக நாவலப்பிட்டியிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தாள். தாரிணியைச் சுமந்து வந்த களைப்பு மாற அம்மம்மா தேநீர் அருந்திக் கொண்டிருந்தாள். தாரிணி அம்மாவின் தலையில், தான் பாடசாலைக்குக் கட்டிக்கொண்டு சென்ற நாடாவை முடிந்து அழகு பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் வழக்கமாக வரும் அந்தத் தபாற்காரர் வந்தார். இதுவரை அவர் சுமந்துவந்த கடிதங்கள் தாரிணிக்கும் அம்மாவுக்கும் அப்பாவின் அன்பையே சுமந்துகொண்டு வந்தன. ஆனால், அன்று அத் தபால் அப்பாவிற்கு வேலை பறிபோனதென்று பெருங் கலக்கத்தை ஊட்டக்கூடிய செய்தியைத் தாங்கி வந்தது. அம்மம்மா இத் துரதிட்டத்திற்குப் பிறக்கப்போகும் பேரனின் சாதகபலனைக் காரணங் காட்டிக் குமுறினாள். அம்மா வாயைத் திறக்காமல் கண்ணீரை மாலை மாலையாக வடித்துக்கொண்டிருந்தாள். தாரிணிக்குச்

சாதம் ஊட்ட எவருமே முன்வரவில்லை. தாரிணிக்கும் ஒன்றும் புரியவில்லை. அப்பாவின் கடிதத்தில் சில எழுத்துக்கள்தான் புரிந்தன. அவள் முதலாம் வகுப்புத் தானே படித்தாள். சூழ்நிலையின் இறுக்கம் தாரிணியின் கதறலாக மாறியது. சித்திதான் சாதமூட்டினாள். அன்று தொடங்கிய புயல் அந்த வீட்டில் ஓயவே இல்லை.

மாமாவும், சித்தியும் பிரமச்சாரிகளாக இருந்தனர். சித்திக்கு அவளது சாதக விசேடமோ என்னவோ, பார்க்கும் வரன்கள் எவருமே ஒத்துவரவில்லை. மாமாவும் சித்திக்குக் கலியாணம் முடியும்வரை காத்திருப்பதற்குத் தீர்மானித்திருந்தார் போலும். அம்மம்மா, அப்பாவையும் அவரது வீட்டுக்காரரையும் திட்டித் தீர்த்தபடி இருந்தாள். தம்பிப்பாப்பா பிறந்தபோதுங்கூட அப்பா வீட்டுப்பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. அம்மம்மாவும், அம்மாவை அவருக்குக் கடிதம் எழுத அனுமதிக்கவில்லை. அம்மாவும் என்ன நினைத்தாளோ? எழுதாமலே இருந்துவிட்டாள். எப்பொழுதாவது அப்பாவின் கடிதம் வரும்; அதுவும் படித்து முடிந்ததும் மூலையில் போய்விடும். அம்மாவும், சித்தியும் தோட்டக் காணியில் ஓடாக உழைத்தார்கள். பெண்களாகவே தோட்டவேலை, வீட்டுவேலை எல்லாம் செய்தார்கள். மாமா கூட்டுறவுக் கடையில் வேலை பார்த்துவந்தார். கிடைக்கும் வருமானத்தில் வீட்டுச் செலவை நெருக்கிப் பிடித்துக் கட்டுப்படுத்தினார்கள். சேமித்த காசைக்கொண்டு நான்கு வருடங்களுக்குப் பின்னர், மண்ணாக இருந்த வீட்டை இடித்துக் கல்வீடாக்கினார் மாமா.

பேரனைத் தூற்றிக்கொண்டிருந்த அம்மம்மா போற்றத் தொடங்கினாள். மாமாவுக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலை உயர்ந்தது, கல்வீடு கட்டியது எல்லாவற்றிற்கும் அவன் பிறந்த வேளையின் பலன்தான் காரணமென நம்பத் தொடங்கியிருந்தாள்.

அப்பாவிற்கு வேலை போனபோது மூடிய அம்மா வின் வாய் பின்னர் திறக்கவே இல்லை. அவள் யாழ்ப் பாணத்திலேயே தங்கிவிட்டாள். தொய்வு அவளை அரித்துக்கொண்டே இருந்தது. தாரிணியை மாமா தமிழ்ப் பாடசாலையிலிருந்து ஆங்கிலக் கல்லூரியொன் றிற்கு மாற்றினார். தாரிணியும் படிப்பில் திறமை சாலிதான். சமயம், இலக்கியம், மொழி இவை எது சம்பந்தமான போட்டிகளிலும் நிச்சயம் அவளுக் கும் ஓர் இடம் இருக்கும். தம்பி முதலாவது வகுப் பிற்குச் சிலேற் மட்டையுடன் போய் வந்தான். அப்பாவைப்பற்றி ஊர் முணுமுணுத்தது. அவ மானம் தாங்காமல் மாமா அப்பாவிற்கும் செலவிற் காக மாதம் இருபத்தைந்து ரூபாவீதம் அனுப்பினார். தாரிணி எட்டாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த பொழுது உடுப்புப் பார்சல் ஒன்றுடன் வந்திறங்கிய அப்பாவை அம்மம்மா துரத்திவிட்டாள். அப்பா மான முள்ளவரோ, அல்லது அவருக்கும் வீட்டுப்பக்கம் தலை காட்டப் பிடிக்கவில்லையோ தெரியாது; அதன்பின் வர வில்லை.

தாரிணி பூப்படைந்தபொழுது பூப்புனித நீராட்டு விழாவும் அப்பா இல்லாமலேயே நிறைவேறியது. அப்பாவிற்கு அறிவிக்கக்கூடவில்லை. தாரிணிக்கு அப்பொழுது அப்பாவின் முகமே மறந்துவிட்டது. அவளும் அதில் அக்கறை காட்டவில்லை. பத்து வரு டங்களாக அவள் அனுபவித்த மாமாவின் அன்பு அவளை அப்பாவைப்பற்றி அக்கறை கொள்ள விட வில்லை. பத்தாம் வகுப்புப் பரீட்சையிற் கணித பாடங் கள் இரண்டிலும் அதிவிசேட சித்தியுடன் பரீட்சை யில் தேறினாள். மாமா பொறியியல் துறைக்கு அவ ளைப் படிப்பித்தார். இவ்வளவு வருடகாலத்தில் மாமாவிற்குச் சம்பளமும் முன்னூற்று ஐம்பத்தொரு ரூபாவாக உயர்ந்திருந்தது. இதனால் முன்போலச் சிரமமில்லாமல் செலவு தாராளமாகவே நடந்தது.

தாரிணி பதினோராம் வகுப்பில் காலடி எடுத்து வைத்த பொழுது இவ்வளவு வருமானம் வந்தும் படிப்புச் செலவு மட்டும் மாமாவின் சம்பளத்தில் பாதியை உறிஞ்சியது. நான்கு பாடங்களுக்கும் தனித்தனியாக 'ரியூசன்', பாடசாலைக் கட்டணம், பஸ் கட்டணம் எல்லாமாகச் செலவு அதிகரித்தது. இருந்தும் மாமா ஒரு நாட்கூட அவளுக்காகப் பணஞ் செலவழிப்பதில் மனங் கோணவில்லை. வருடங்களின் சுழற்சியாலும் தொய்வின் கொடுமையாலும் அம்மா துரும்பானாள். அம்மம்மாதான் வயது கடந்தும் ஓடி ஆடி உழைத்தாள். அம்மம்மாவினதும், மாமாவினதும் அன்பு அளவிடற்கரியது. அவர்களின் அன்பை நினைத்தபொழுது தாரிணியின் உடல் ஒருமுறை சிலிர்த்தது; கண்ணீர் முத்துக்கள் பாதங்களில் வீழ்ந்து குளிர்வித்தன. இவ்வளவு நேரமும் கனவுலகில் திளைத்த தாரிணி திடுக்கிட்டு எழுந்தாள்.

அக்கம் பக்கத்து வீடுகளில் எல்லோரும் விளக்கேற்றி விட்டார்கள். தாரிணியின் கைகள் துரிதமாக இயங்கின. வீடு ஒளி பெற்றது. மாமாவிற்கு வேண்டிய மருந்துகளை ஊற்றிக்கொண்டு அவரது அறையை அடைந்தாள். அறையின் ஒரு மூலையில் கட்டிலொன்று இருந்தது. தலைமாட்டில் ஒரு அலுமாரி. நல்ல காற்றோட்டமான அறை. அவரது உடம்பு நோயின் கொடுமையால் துடித்துக்கொண்டிருந்தது. தொய்வு இழுப்புக் கடைசிக் காலத்தில் இவரையும் பிடித்திருந்தது. மருந்தை வாயில் ஊற்றிவிட்டுப் போர்வையை நன்றாக இழுத்து மூடினாள். யன்னற் கதவு படார் என்று மோதியது. குளிர்காற்று வீசியதால் யன்னலை இழுத்து மூடிக் கொழுக்கியை மாட்டிவிட்டு நிமிர்ந்தபோது சுவரில் இருந்த படம் கண்ணிற் பட்டது. அது மாமாவின் இளமைக்காலத்துப் படம். பக்கத்தில் சித்தியினுடைய படமும் இருந்தது. இருவருடைய கண்களும் இளமைத் துடிப்புடன் வாழ

வேண்டும் என்ற ஆசையைத் தேக்கி வைத்துக்கொண்டிருந்தன. ஆனால்... அவர்கள் இருவரும் மண வாழ்க்கையின் முதற்படியைக்கூட எட்டிப் பார்க்கவில்லையே! ஏன்?... தாரிணியிடமிருந்து நாகபாம்பின் சீறலாக வெளியேறிய பெருமூச்சு அறையின் வெம்மையை அதிகப்படுத்தியது. அவளது கண்கள் குளமாயின. சிந்தனைக் குதிரை தெறிகெட்டு ஓடியது.

அவளது மாமாவும், சித்தியும் கடைசிவரை உலகத்து இன்பங்களை அனுபவிக்காமல் பிரமச்சாரிகளாகவே இருக்கிறார்கள். அம்மம்மா பிள்ளைகளின் கலியாணம் நிறைவேறாத குறையுடனேயே கண்ணை மூடினாள். அம்மாவும் நோயின் கொடுமையாலும் மனக்கவலையின் வேகத்தாலும் தாரிணியையும் தம்பியையும் மாமாவின் கையிற் கொடுத்துவிட்டு இறந்துபோனாள். அம்மாவின் இறுதிச் சடங்கிற்கு அப்பா வந்திருந்தார். அவரை எங்கோ தேடிக் கண்டுபிடித்தார்கள். இதற்காக அம்மாவின் பிரேதத்தை மூன்று நாட்கள்வரை வைத்துக் காத்துக்கொண்டிருந்தனர்.

அம்மா!... அவள் பிள்ளைகளின் நல்வாழ்விற்காகத் தனது துக்கத்தை மறந்து தன்னை நத்தையாக ஒடுக்கிக் கொண்டாள். கடைசிவரை ஒரு முணுமுணுப்பு எதுவுமில்லை. அம்மம்மா எரிமலையாகக் குமுறும் பொழுதெல்லாம் அம்மா அமைதியாகவே இருப்பாள். அப்பா நாற்பது வயதிற்குப்பின் யாரோ ஒருத்தியைத் தாலிகட்டாமற் கலியாணம் செய்துகொண்டதாக ஊரிற் பேசிக்கொண்டபொழுது, அம்மா அதைப் பற்றி அக்கறைப்படவில்லை. தாரிணி இதுபற்றி அம்மாவிடம் எதுவுங் கேட்கவுமில்லை. அவளாகவே தாரிணிக்குச் சொல்லவுமில்லை.

அம்மாவின் இறுதிச் சடங்குகளை நிறைவேற்றிவிட்டு அப்பா வீட்டிலேயே இருந்தார். மாமாவிட

மும், சித்தியிடமும் எப்பொழுதுங் குறை காண்பார். முணுமுணுவென்று தனக்குள்ளே பேசிக்கொள்வார். பிள்ளைகளோடு அந்நியோன்னியம் இல்லாவிடினும் தனது சொத்துக்களைத் தாரிணிக்கும் தம்பிக்கும் எழுதிவிட்டார்.

தாரிணிக்கும் பொறியியல்துறை ஒத்துவரவில்லை. ஆசிரியையாக வேலைக்கமர்ந்தாள். முதல்மாதச் சம்பளப் பணத்துடன் வீட்டிற்கு வந்தபொழுது மீண்டும் பூசல் தொடங்கியது. தாரிணி சம்பளத்தை மாமாவிடம் கொடுத்துக் காலில் விழுந்து வணங்கினாள். மாமா அவளை ஆசீர்வதித்து அப்பாவிடம் கொண்டுபோய்க் கொடுக்கும்படி கூறினார். அவள் அப்பாவிடம் சென்றபொழுது அவர் பூகம்பமாக வெடித்தார். "என்னை இந்த வீட்டில் யார் மதிக்கிறார்கள். நீ ஒருத்திதான் குறைவா? சீ! நாயே,— பெற்றவன் ஒருவன் இருப்பது தெரியாமல் வேறொருவரின் உத்தரவின் பெயரிலா நீ என்னிடம் வரவேண்டும்?" இவை அவரது வாயிலிருந்து வெளிவந்தவை. கையில் இருந்து வெளிவந்தவை தாரிணியின் உடலில் பதிந்தன. மாமாகூட இதுவரை தாரிணியைக் கை நீட்டி அடித்ததில்லை. இப்பொழுது மாமா தடுத்தார். அப்பா கொதித்தார். இருவருக்கும் வாக்குவாதம் வளர்ந்தது. முடிவு மாமாவும் சித்தியும் வீட்டை விட்டு வெளியேறினார்கள். தம்பியும் மாமாவுடன் சென்றான். அவன் பிறந்தபொழுதே அப்பாவைக் காணாததாலேயோ என்னவோ அவன் எப்பொழுதும் அவரை எதிர்த்துக்கொண்டே இருப்பான். தாரிணி தான் மாமாவுடனும் அப்பாவுடனும் இருபக்கமும் சாய்ந்து நடப்பாள். மாமாவும், சித்தியும், தம்பியும் வாடகை வீட்டில் குடியேறினர். தம்பி, அப்பா இல்லாத வேளைகளில் தாரிணியிடம் வந்து மாமாவினதும் சித்தியினதும் அன்பைத் தெரிவித்துவிட்டுச் செல்வான். மாமாவும் சித்தியும் வீட்டுப்பக்கம் தலை காட்டவில்லை.

தாரிணிதான் அப்பாவிற்குத் தெரியாமல் இடையிடையே போய்வருவாள். இருவரும் கண்ணீரின் சங்கமத்தில் வாய் பேசாத ஊமைகளாக எதிரெதிரே உட்கார்ந்திருப்பார்கள். மௌனந்தான் இருவருக்குமிடையே சாட்சியாக நிற்கும். தாரிணிக்குத் தன்னை மூன்று வயதுமுதல் வளர்த்த சித்தியையும் மாமாவையும் கடைசிக் காலத்தில் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஏக்கம். சித்திக்கோ, எல்லோரையும் கைவிட்டு எங்கோ போய் இப்பொழுது திரும்பி வந்திருக்கும் இந்த மனிதர் வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாரே என்ற கொதிப்பு.

தாரிணியைக் காணும்போதெல்லாம் மாமாதான் அவளை அருகில் இருத்திக்கொண்டு ஆறுதல் சொல்வார். அவர் எப்பொழுதுமே சமாதான வழியை நாடுபவர். உணர்ச்சிகளை வெளியே சிந்த விடமாட்டார். சித்திதான் அழுது அழுது ஓய்ந்து போனாள். என்ன இருந்தாலும் தாய்க்குத் தாயாகத் தோளிலும், மார்பிலும் வளர்த்தவள் அவள்தானே!...

தாரிணி பாடசாலையிற் படித்தபொழுது, ஜீவன் அவளது வகுப்பு மாணவன். ஜீவனது அறிவும் ஆற்றலும் தாரிணியைக் கவர்ந்தன. மணந்தால் அவனையே மணப்பதென்று தனக்குள் தீர்மானித்தாள். வெளியே மூச்சு விடவில்லை. மற்றைய மாணவர்களுடன் பழகியது போலவே அவனுடனும் கட்டுப்பாட்டுடன் பழகினாள். மாமாவும் சித்தியும் வீட்டைவிட்டுப் போன பின் அப்பா அவளுக்கு மணம் பேசினார். அவள் என்ன செய்வாள்... பேதை. மாமாவிடம் ஓடிச்சென்று தனது எண்ணத்தை வெளியிட்டாள். அவர் தன்னால் எதுவுஞ் செய்ய முடியாதே என்று வருந்தினார். என்ன செய்வதென்று ஏங்கிக்கொண்டிருந்த வேளையில் திடீரென ஒருநாள் கடைக்குப் போன அப்பா பிணமாகக் காரிலிருந்து இறக்கப்பட்டார். மாமாதான் அவரது இறுதிச் சடங்குகளைத் தம்பியைக் கொண்டு

நிறைவேற்றினர். அதன்பின்னர் மாமாவும் சித்தியும் தாரிணியின் வீட்டுக்கே திரும்பி வந்துவிட்டார்கள்.

இரு மாதங்களின்பின் மாமா ஜீவனது வீட்டிற்குப் புறப்பட்டார், ஜீவனது அப்பாவும் எடுத்த எடுப்பிலேயே சம்மதத்தைத் தெரிவித்ததனல் தாரிணியின் திருமணம் சில நாட்களில் நிறைவேறியது. ஊரவர் சிலர் தந்தை இறந்து ஒருவருடம் முடியுமுன்னர் மகளுக்குத் திருமணமா? என்று முணுமுணுத்தனர். ஆனல், தாரிணியைப் பொறுத்தவரை பெற்ற கடமையைத் தவிரத் தந்தை ஸ்தானம் மாமாவிற்குத் தானே! எனவே அவள் அதைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை.

தாரிணியைப் பொறுத்தவரை வாழ்க்கை அவளுக்குச் சகடக்கால்தான். துன்பத்தையும், இன்பத்தையும் மாறி மாறி அனுபவித்தாள். தாரிணியின் மணக்கோலத்தைக் கண்டுகொண்ட மகிழ்ச்சியிலேயே சித்தி உயிர் நீத்தாள். தம்பிதான் அவளுக்கும் கிரியைகளைச் செய்தான். ஜீவன் இப்பொழுது திருகோணமலையில் ஆசிரியராக இருக்கிறர். தம்பியும் அவருடனேயே தங்கிப் படிக்கின்றன். தாரிணிக்குத் திருகோணமலைக்கு மாற்றங் கிடைக்கவில்லை. மாமாவும் அவளும் இங்கேயே இருக்கிறர்கள். மாமாவிற்குக் கடமை செய்வதில் அவள் திருப்தி காண்கிறள். தாரிணி இப்பொழுது மீண்டும் மகிழ்ச்சியில் திளைக்கிறள். ஜீவனின் அன்புக் கடிதங்கள் அவளுக்கு உற்சாகம் ஊட்டுகின்றன. "தாரீ" என மாமா அழைக்கும் குரல் கேட்டு அவரது அறைக்குக் கோப்பையுடன் ஓடுகிறள் தாரிணி.

# இரத்தத் தொடர்பு

செல்வி ந. திருமகள்

காலைநேரம்; வீதியில் பாடசாலைப் பிள்ளைகளின் ஆரவார ஒலிகள்... அந்தப் பெரிய தார்த்தெருவின் ஓரத்தில் உணர்ச்சியற்ற நிலையில் ஒரு மனிதன் படுத்திருக்கிறான். அவனைச் சுற்றி ஒரு சிறு கூட்டம். ஆனால், சுயநலம் பிடித்த இந்த உலகத்தில் அவனுக்குச் சிகிச்சையளித்துக் காப்பாற்ற எவருமே அக் கூட்டத்திலிருந்து முன்வரவில்லை. அப்பொழுதுதான் அந்தப் பெரிய கார், '.கிறீச்' என்ற ஒலியுடன் சாலை ஓரத்தில் நிற்க, காரின் கதவைத் திறந்துகொண்டு இறங்கினார் டாக்டர் ரகு. தன்னுடைய சாந்த குணத்தாலும், இனிமையான பண்புகளாலும், தொழில் திறமையாலும் அந்த நகரிலேயே பிரபல்யமான ஓர் இடத்தை டாக்டர் ரகு பெற்றிருந்தார்.

காரில் இருந்து இறங்கியதும் அவரது கண்கள், சாலை ஓரத்தில் உணர்ச்சியற்றுக் கிடக்கும் அம் மனிதனின் முகத்தை ஓரிரு விநாடிகள் கூர்ந்து நோக்கின. அடுத்த கணம் அவனைத் தூக்கிக் காரினுள் போட்டுக்கொண்டு தமது மருத்துவ மனைக்கு விரைந்தார். மருத்துவமனையில் டாக்டரின் கரங்கள் துரிதமாகச் செயலாற்றின. தேவையான மருந்துகளைக் கொடுத்துவிட்டு அவன் விழித்தெழும்வரை எதிரேயுள்ள கதிரையில் அமர்ந்து

சிகரட்டைப் புகைத்தபடியே டாக்டர் சிந்தனையில் ஆழ்ந்தார். ஓர் ஏழை மனிதனை நோயின் கொடிய கரங்களிலிருந்து காப்பாற்றிவிட்டேனே என்ற மனத் திருப்தி அவருக்கு. ஆனால், அந்த மனிதனுடைய சந்திப்புத் தமது வாழ்வில் பெருத்த மாறுதல்களை உண்டாக்கும் என்றோ, வாழ்நாள் முழுவதும் அதற்காகத் தான் மனவருத்தப்படவேண்டி வரும் என்ற உண்மையோ அவருக்கு அப்போது தெரிந்திருக்க நியாயமில்லை.

மயங்கிக்கிடந்த அம் மனிதன் சில விநாடிகளில் கண் திறந்தான். தனக்கு அடிக்கடி அந்த வியாதி வருவதாகவும், இதனால் எதுவித வேலையையும் செய்ய முடியாமல் குடும்பத்தையும் காப்பாற்ற முடியாமல் தான் கஷ்டப்படுவதாகவும் அவன் கூறியபோது அவனுக்காக இரங்கினார் டாக்டர். இன்னும் அவன் சரியாகக் குணமடையாததால் தனது காரிலேயே அவனை ஏற்றிக்கொண்டு அவனது வீடுவரை சென்ற டாக்டர், வற்புறுத்தல் தாங்க இயலாமல் வீட்டிற்குள் நுழைந்த பொழுது அங்கு வந்ததையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அதற்குக் காரணம் பாரதியாரின் கனவிலே வந்த பதினாறு வயது இளமங்கையை நிதர்சனமாக அங்கு கண்டு கொண்டதுதான். சந்திரா என்று அழைத்துக்கொண்டே அம்மனிதன் வீட்டினுள் நுழைந்த பொழுது கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த சந்திராவும் டாக்டரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே கனவுலகில் நிற்பதுபோல் நின்றார்கள். கண்கள் ஓராயிரம் கதைகள் பேசினவோ? "இவள் தான் எனது மகள் சந்திரா" என்று அவளை டாக்டருக்கு அறிமுகம் செய்துவைத்தான் அம் மனிதன்.

அன்று ஆரம்பமான அவர்களது சந்திப்புத் தொடர்ந்தது. சந்திரா படிக்கும் கல்லூரியையும் அவள் போகும் பாதையையும் அறிந்துகொண்ட ரகு குறிப்பிட்ட நேரம் வந்ததும் காரில் பிரசன்னமாவார். சந்திப்

புக்கள் தொடர்ந்தன; கடிதங்கள் பரிமாறின. பட மாளிகைகளும் பூங்காக்களும் அவர்களது சந்திப்புக்களுக்கு இடமாயின. ஆனால், இவை எதுவும் சந்திராவின் தகப்பனது காதுக்கு எட்டவேயில்லை. மகள் பாடசாலைக்குச் செல்கின்றாளென்று நம்பிக்கொண்டிருந்த தந்தை ஒரு நாள் தற்செயலாக ரகுவையும் சந்திராவையும் படமாளிகையிற் கண்டபோது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வேதனைப் பட்டார். டாக்டர் தனது மகளை மணமுடிக்க விரும்புகிறார் என்பதையிட்டு ஓரளவு மகிழ்ந்த பொழுதும் டாக்டரின் தகுதிக்கும் ஏழைகளாகிய தங்களின் தகுதிக்கும் ஒத்துப்போகுமா என்ற கேள்வி பூதாகாரமாக அவர்முன் எழுந்தது. டாக்டர்தான் விரும்பினாலும், அவரது குடும்பத்தார் சம்மதிப்பார்களா?... மேலும் சந்திராவைத் தனது தமக்கையின் மகனாகிய தியாகுவிற்கு மணமுடித்து வைக்கவேண்டுமென்ற எண்ணமும் அவருக்கு இருந்தது. தியாகுவும் ஏழை.

அன்று மாலை சந்திராவிற்கும் தகப்பனுக்குமிடையில் பூகம்பம் வெடித்தது. டாக்டருடன் தொடர்பைத் துண்டித்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்தார்; புத்தி கூறினார்; இறுதியில் கெஞ்சினார். சந்திரா அசையவில்லை. மணந்தால் டாக்டர் ரகுவைத்தான்; அல்லது திருமணமே வேண்டாம் என்று அடம்பிடித்தாள். தியாகுவை மணம் செய்ய அவளுக்குச் சிறிதேனும் மனமில்லை. சந்திராவின் தந்தை என்ன செய்வார்? இறுதியில் அவளது பிடிவாதத்திற்கு விட்டுக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், இன்னுமொரு பேரிடி அவர்களுக்காகக் காத்திருந்தது.

டாக்டர் ரகுவின் காதல் நடவடிக்கைகள் அவரது பெற்றோர்வரை எட்டிவிட்டது. தந்தை கொதித்தார்; தாய் துடித்தாள். ஆயிரமாயிரமாகச் செலவு செய்து டாக்டராக்கிய தம் மகனை அதைவிடப் பல மடங்கு

சீதனம் வாங்காமல் எங்கோ ஒரு ஏழைப் பெண்ணுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. தாய்க்குச் சுகமில்லையென்று தந்தி பறந்து வந்தது, டாக்டருக்கு. ஒரு கிழமை லீவில் ஊருக்குச் சென்ற டாக்டர், அதன்பின்பு திரும்பவேயில்லை. சந்திரா திகைத்தாள். அடுத்தடுத்துப் போட்ட கடிதங்களுக்குப் பதிலேயில்லை. டாக்டர் வேறு எங்கோ... நகரத்திற்கு மாற்றலெடுத்துச் சென்று விட்டாரென்று தெரியவந்தது. சில நாட்கள் கழித்து டாக்டர் ரகுவிற்கும் பணக்கார வர்த்தகர் ஒருவரின் மகளுக்கும் திருமணமென்று பத்திரிகையிற் படித்தபொழுது உலகே இடிந்து தன் தலையில் விழுந்தது போல் உணர்ந்தாள். இப்பொழுது அவளை மணஞ்செய்யத் தியாகுகூட முன்வரவில்லை.

நோயாளியான அவளுடைய தந்தை, மகளுக்கு ஏற்பட்ட கவலையின் ஏக்கத்தால் உயிர் நீத்தார். சந்திராவிற்குக் கண்ணீர் வற்றிவிட்டது. இடிமேல் இடி விழுந்து பாழாய்ப்போன தன் வாழ்க்கையை நினைத்தாள். 'ஏன் உயிர் வாழவேண்டும்? யாருக்காக உயிர் வாழவேண்டும்?' என்ற கேள்வியும் கூடவே எழுந்தன. ஆனால், உள்ளத்தின் எங்கோ ஒருமூலையில் வாழத்தான் வேண்டும் என்ற துடிப்பும் பிறந்தது. சந்திரா வைராக்கியம் கொண்டாள். தாதிவேலை அவளை 'வா' என்று அழைத்தது. நேர்முகப் பரீட்சையில் அவளுக்கு அழகு துணைபுரிந்தது. இத்தனை அழகான பெண் தாதியின் வெண்ணிற உடைக்குள் வாழ்நாள் முழுவதும் வாடப் போகின்றாளே என்று யாரோ ஒருவர் இரங்கினார். ஊரை விட்டு வெகு தொலைவில் அம்பாந்தோட்டையில் அவள் இப்பொழுது ஒரு தாதி. இப்பொழுதெல்லாம் காதலைப்பற்றி அவளின் அபிப்பிராயமே வேறு. காதல் என்பது கரும்பை அடியில் இருந்து சுவைப்பது போன்றது என்பது அவளின் திடமான நம்பிக்கை. அறியாப் பருவத்தில்

அவசரத்தில் ஏற்படும் முதிரா உணர்விற்குத்தான் காதல் எனப் பெயரிட்டார்களோ?

காலம் என்ற நீரோட்டத்தில் மேலும் சில ஆண்டுகள் உருண்டோடுகின்றன. சந்திராவின் காதோரத்தில் இன்னும் நரைமயிர்கள் தலைகாட்டவில்லை. பிரமச்சரியத்தின் பலனோ?... கடற்கரை ஓரத்தில் அமைந்திருக்கும் அம்பாந்தோட்டை மருத்துவ மனை அவளுக்கு மிகவும் பிடித்துவிட்டது. மாற்றம் கேட்காது பல ஆண்டுகள் அங்கேயே வேலை செய்துவிட்டாள்.

அன்று அவளுக்கு இரவு நேரக் கடமை. மருத்துவ மனைக்குப் புறப்பட்டபொழுது அவள் மனதில் என்றுமில்லாத உணர்வுகள். பௌர்ணமி நிலவு காய்ந்துகொண்டிருந்தது. பெருக்குக் காலமாதலால் கடலின் குமுறல் ஓசை பெரிதாகக் கேட்டது. 'ஏன் இன்று கடல் பெரிதாகக் குமுறுகின்றது?' அவள் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். 'சந்திரா, இன்று மருத்துவ மனைக்குப் புதிய டாக்டர் ஒருவர் வந்திருக்கிறார்.' கடமை முடிந்து விடுதிக்குத் திரும்பிக்கொண்டிருந்த சக தாதி நேசமணி இதைக் கூறி விட்டுப் போனாள். சந்திராவின் மனதில் ஏனோ ஒரு கலக்கம். மருத்துவ மனையை நெருங்க நெருங்கப் பதட்டம் கூடியது.

கையெழுத்துப் போடுவதற்காகப் புதிய டாக்டரின் அறைக்குள் நுழைந்த சந்திரா, பாதி வழியிலேயே திகைத்துப்போய் நின்றுவிட்டாள். சீராகக் கேட்ட செருப்பொலிகள் திடீரென நின்றுவிட்டதைக் கேட்ட புதிய டாக்டரும் நிமிர்ந்து பார்த்தார். அவரும் திகைத்துப்போய்ச் சிலையாகி விட்டாரே — 'ஏன்? ச—ந்—தி—ரா!' என்று முனகியது டாக்டரின் வாய். 'டா...க்டர்... ரகு!!' சந்திராவின் உதடுகளும் அசைந்தன. டாக்டரின் மனம் பல ஆண்டுகள் முன்னோக்கிப்

ப்ாய்ந்தது. முதன்முதல் சந்தித்தபொழுது அவர்கள் இருவரும் இன்பச் சிலையாகி நின்றார்கள்... ஆனால்... அன்று நின்ற நிலைக்கும் இப்பொழுது நிற்கும் நிலைக்குந்தான் எவ்வளவு வித்தியாசம்? டாக்டரின் உள்ளத்தைப்போலச் சந்திராவின் உள்ளம் முன்னோக்கிப் பாய்ந்து கனவில் ஆழ்ந்து விடவில்லை. அவளின் மனம்தான் பாலைவனமாகி விட்டதே! பசுமையான நினைவுகளுக்கு அங்கு இடமேது? பல ஆண்டுகள் வேலை செய்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றம் கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதே என அவளின் மனம் அசைபோட்டது.

டாக்டரின் கண்கள் சந்திராவின் கழுத்தை நோக்கின. திகைப்பு அதிகமாகியது. சந்திரா எங்கோ பார்த்துக்கொண்டிருந்தாள். கடலின் குமுறல்கள் இன்னும் தெளிவாகக் கேட்டன. டாக்டர் தொண்டையைச் செருமிக்கொண்டார். "சந்திரா, விதி சதி செய்துவிட்டது. இப்பொழுதுகூட ஒரு வார்த்தை சொல்; உனக்கு நானே மணமுடித்து வைக்கின்றேன்." அசாதாரண துணிவை வரவழைத்துக்கொண்டு டாக்டர் இதனைக் கூறினார். சந்திரா மறுமொழி கூறவில்லை. விரக்தியாகச் சிரித்தாள். தொலைவில் கேட்கும் கடலின் குமுறல்தான் அவள் கூறவேண்டிய விடைகளையெல்லாம் கூறிக்கொண்டிருக்கின்றதே!

டாக்டரின் தர்மசங்கடமான நிலையைப் போக்குவதற்கோ என்னவோ தொலைபேசி மணி ஒலித்தது. தொலைபேசிச் செய்தியைக் கேட்ட டாக்டரின் முகம் குழப்பத்தில் ஆழ்ந்தது. 'உடனடியாகக் கொண்டுவா' என்று கூறிவிட்டு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யச் சத்திர சிகிச்சை மண்டபத்திற்குப் பதைப்புடன் விரைந்தார். கடமையை நினைத்துச் சந்திராவும் பின்தொடர்ந்தாள். சில நிமிடங்களில் சந்திராவின் வயதையொத்த ஒரு பெண், விபத்தினால் ஏற்பட்ட காயங்களுடன்

காரில் இருந்து இறக்கப்பட்டுச் சத்திர சிகிச்சை மண்டபத்திற்குக் கொண்டுவரப்பட்டாள். அவள்தான் டாக்டரின் மனைவி என அறிந்தபொழுது ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தாள் சந்திரா.

டாக்டரின் கரங்கள் துரிதமாகச் செயலாற்றின; ஆயினும் அவர் முகத்தில் ஏனோ ஓர் ஏக்கம். விபத்தினால் அவர் மனைவிக்கு அதிக இரத்தம் வெளியேறிவிட்டது. உடனடியாக இரத்தம் செலுத்தவேண்டும்; அம்பாந்தோட்டை மருத்துவ மனையில் அவளின் இனத்திற்கேற்ற இரத்தம் இல்லை. டாக்டரின் கண்முன்னால் சத்திரசிகிச்சை மண்டபமே சுழல்வதுபோல் தோன்றியது. அப்போதுதான் டாக்டரின் முகத்துக்கு நேரே சந்திராவின் கை நீண்டது. "டாக்டர், எனது இரத்தத்தைப் பரீட்சித்துப் பாருங்கள்." கடமையின் குரலா? காருண்யத்தின் குரலா? டாக்டரால் இனங்காண முடியவில்லை.

சந்திராவின் இரத்தம் நன்கு பொருந்திவிட்டது. அடுத்த சில நிமிடங்களில் டாக்டரின் மனைவியின் உடலில் சந்திராவின் இரத்தம் ஏறிக்கொண்டிருந்தது. இரவு முழுவதும் இருவரும் நோயாளியின் அருகில் நின்று கவனித்துக்கொண்டார்கள். அதிகாலை நான்கு மணி; டாக்டரின் மனைவி மெதுவாகக் கண் திறந்தாள். அவள் பிழைத்து விட்டாள் என்ற மனத் திருப்தியுடன் டாக்டர் திரும்பியபொழுது அங்கு சந்திராவைக் காணவில்லை.

'சந்திரா!' என்று அழைத்துக்கொண்டே தனது அறைக்குத் திரும்பிய டாக்டர், மேசையில் பாரம் வைத்திருந்த கடிதத்தைப் பதைப்புடன் படித்தார்.

டாக்டர் ரகுவிற்கு:

நீங்கள் என்னைத் திருமணம் செய்யாமல் விட்டுச் சென்றதுதான் என் மனதில் ஏற்பட்ட பெரிய

வடு என இதுவரை நினைத்திருந்தேன். ஆனால், இன்று நீங்கள் எனக்குத் திருமணம் செய்து வைப்பதாகக் கூறிய சொல் அதைவிட ஆழமான வடுவாக என் மனதிற் பதிந்துவிட்டது. டாக்டர், எப்பொழுதோ ஒரு காலத்தில் உங்களுடைய தொடர்பிற்காக ஏங்கினேன். ஆனால், இன்று எதிர்பாராத விதமாக ஏதோ ஒரு விதத்தில் அத் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. உங்களுடைய மனைவியின் உடலில் ஓடுவது எனது இரத்தம்; அந்த இரத்தத் தொடர்பே போதும் எனக்கு. நான் எங்கு செல்கின்றேன் என்பதையிட்டு அக்கறைப் படாதீர்கள்.

எங்கிருந்தாலும்
உங்கள் நல்வாழ்வை விரும்பும்
சந்திரா

டாக்டர் மரமாகி நின்றார். அவர் கண்களில் இருந்து இரு கண்ணீர்த் துளிகள் முகிழ்த்தன.

# பரிசு

சு. கணேசலிங்கம்

அந்தப் பெரிய மாளிகையின் கராச்சிலிருந்து ஆறு ஸ்ரீ காரொன்று உறுமிக்கொண்டே வெளியே வந்து முன் போர்டிக்கோவில் நின்றது. மாளிகையின் சொந்தக்காரரான முத்துச்சாமி எட்டிப்பார்த்தார். 'ரங்கா, கார் வெளிக்கிட்டு விட்டது; நீ இன்னும் கல்லூரிக்குப் போகவில்லையா?' என்று அவர் குரல் கொடுத்ததும் உள்ளேயிருந்து அவரது மகன் ரங்கன் ஓடி வந்து காரில் ஏறிக்கொண்டான். கார் தமது ஒரேயொரு அருமை மகனைச் சுமந்துகொண்டு கல்லூரிக்குப் போவதை வாசலில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார் முத்துச்சாமி.

முத்துச்சாமி அந்தக் கல்லடிக் கிராமத்திலேயே பெரிய பணக்காரர். அவர் எப்படிப் பணக்காரர் ஆனார் என்று கூறினால் அவரை இப்பொழுதே சிறைக்கு அனுப்பவேண்டி வருமாகையால் அதைக் கூறாது விடுகின்றேன். பணக்காரருக்கேயுரிய தொந்தியுடன் கூடிய உருவத்தில் பணத்திமிரை மீசை எடுத்துக் கூற அதிகாரத்தின் சின்னமான கைப்பிரம்பு சமேதராக வாசலில் நின்று கார் போவதைப் பார்த்துக்கொண்டிருந்த முத்துச்சாமியின் முகத்தில் கலக்கமும் கவலையும் குடிகொண்டிருந்தன. கடந்த சில காலமாக

அவருடைய மகன் ரங்கனின் போக்கு அவருக்குப் பெருத்த கவலையைக் கொடுத்து வருகின்றது. தாம் சேர்த்து வைத்துள்ள பல இலட்சம் ரூபா சொத்துக்கு அதிபதியாகப் போகின்ற தம் ஒரேயொரு மகன் பணத்தைப்பற்றி அக்கறை இல்லாமல் ஏழைகளைப்பற்றியே எப்பொழுதும் பேசிக்கொண்டும் சிந்தித்துக்கொண்டும் இருப்பதைப் பார்க்கும்பொழுது அவருக்குப் பெருங் கோபம் உண்டாகும். ஆனாலும் என்ன செய்வது? ஒரேயொரு மகனாயிற்றே.

வாயிலில் இருந்து சிந்தித்துக்கொண்டு இருந்த முத்துச்சாமி, 'வசந்தம்' என்று அழைத்துக்கொண்டே உள்ளே திரும்பினார். 'என்ன ஐயா?' என்று கேட்டுக்கொண்டே பணிவுடன் அவர்முன் வந்து நின்ற அப் பணிப்பெண்ணை நோக்கினால், அழுக்கில்லாமல் அழகாக வர்ணமடித்த அவ் வீட்டின் சுவர்களுக்கும் அவளது ஆடைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் தெளிவாகப் புலப்படும். அவள் அணிந்திருந்த பாவாடை சாயம்போய்ப் பல இடங்களில் திட்டுத்திட்டாக சட்டிக்கரி படிந்திருந்தது. சட்டை, முதுகில் கிழிந்திருந்தது. முத்துச்சாமிக்கு வெட்கமில்லைப்போலும். இவ்வளவு பணக்கார வீட்டில் இத்தகைய கோலத்தில் ஒரு வேலைக்காரப் பெண்ணை வைத்திருப்பதற்கு. ... தமக்குக் குளிர்பானம் கொண்டு வரும்படி கூறிவிட்டு அருகில் இருந்த சோபாவில் சாய்ந்தார் முத்துச்சாமி.

வசந்தம் சமயற்கட்டை நோக்கிச் சென்றாள். வசந்தம் ஏழை; என்றாலும் அழகானவள். ஏழ்மைக் கோலத்திலும் அவளது அழகு சுடர்விட்டுப் பிரகாசித்தது. ரங்கனுக்கு அவளிடத்தில் விசேட பிரியம். இதுகூட முத்துச்சாமிக்குப் பொறுப்பதில்லை. ரங்கன்-வசந்தம் தொடர்பையும் அவர் சந்தேகக் கண்ணுடனேயே நோக்கிவந்தார். வசந்தத்தின் தகப்பனான கண்ணையா பல ஆண்டுகளுக்கு முன்பு இதே மாளிகையில் வேலை செய்துவந்தான். ஆனால், என்ன

காரணமோ, அவனுக்கு வேலை தெரியாது என்று கூறி அவனை விலக்கிவிட்டு மகள் வசந்தத்தை வேலைக்கு வைத்துக்கொண்டார் முத்துச்சாமி.

சமையற்கட்டிலே வசந்தம் குளிர்பானம் கலந்து கொண்டிருந்தாள். சோபாவிலே அமர்ந்திருந்த முத்துச்சாமி மெல்லப் பூனையைப்போலச் சமையற்கட்டு வாசல்வரை வந்தார். கதவால் எட்டிச் சமையற்கட்டில் என்ன நடக்கின்றது என்று பார்த்துக்கொண்டிருந்தார் முத்துச்சாமி. வசந்தம் தனக்கு மட்டுந்தான் குளிர்பானம் கலக்கின்றாளா? அல்லது தானும் அதில் பங்கெடுத்துக் கொள்கிறாளா? என்று பார்ப்பதுதான் அவரின் முக்கிய நோக்கம். சமையலறையில் தான் முகம் பார்ப்பதற்கென வைத்திருந்த சிறிய புகைபடிந்த கண்ணாடித் துண்டில் இதனைப் பார்த்து விட்டாள் வசந்தம். தனக்குள் உள்ளூர நகைத்துக் கொண்டாள். பணம் என்றாலே சின்னத்தனமும் வந்துவிடுமோ?

பின்னேரம் பாடசாலையால் வந்ததுமே ரங்கன் புறப்பட்டு விட்டான். அவன் எங்கு செல்வான் என முத்துச்சாமிக்கு நன்கு தெரியும். ஏழைகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிவதும் ஆறுதல் கூறுவதும் உதவிசெய்வதுமே ரங்கனின் பொழுதுபோக்குகள். முத்துச்சாமி பற்களை நறநற எனக் கடித்துக்கொண்டார்.

வரவர ரங்கனின் போக்குத் தீவிரமாகியது. முத்துச்சாமி கவலைக் கடலில் ஆழ்ந்தார். இப்பொழுதெல்லாம் ரங்கன் பாடசாலைக்குப் போவதில்லை. அவனுக்கு இப்பொழுது இருபத்தைந்து வயது இருக்கும். ஒருநாள் பொதுக்கூட்டம் ஒன்றிற்குப் போயிருந்தான். சீதனப் பிரச்சனையைப்பற்றிப் பேச்சாளர் பேசினர். சீதனம் என்ற பேயினால் எத்தனை ஏழைப்பெண்களின் வாழ்வு பாழாய்ப் போயிருக்கின்

றது என்று அவர் உணர்ச்சிகரமாகக் கூறிய பொழுது ரங்கனுக்குக் கண்ணீர் வந்துவிட்டது. ஒவ்வொரு ஆண்மகனும் உண்மையில் ஆண்மகனுயிருந்தால் சீதனம் என்ற பேடித்தனத்திற்குக் கட்டுப்படாமல் ஏழைப்பெண்களுக்கு வாழ்வளிக்க முன்வரவேண்டும் என்று அவர் கூறியபொழுது ரங்கனுக்குப் புதிய ஓர் உத்வேகம் உண்டாயிற்று. திருமணஞ் செய்தால் ஓர் ஏழைப் பெண்ணைத்தான் திருமணஞ் செய்வது என்று அவன் சங்கற்பம் செய்துகொண்டான். வசந்தத்தின் நினைவு அவன் மனதில் எழுந்தது.

அன்று மாலை ரங்கன் தந்தையாரிடம் தன் முடிவைக் கூறியபொழுது எரிமலைகள் குமுறின. இளைய தலைமுறையும் பழைய தலைமுறையும் எதிரெதிரே மோதிக்கொண்டன. 'அப்பா இந்தப்பணத்தை இறக்கும்பொழுது நாம் கொண்டுபோவதில்லை. நான் திருமணஞ்செய்தால் வசந்தத்தைத் தான்.இல்லாவிட்டால் வீட்டை விட்டே போய்விடுவேன்' என்று கூறிய பொழுது முத்துச்சாமிக்கு நெஞ்சை அடைத்தது. அவர் எதுவும் பேசாமல் தனது அறைக்குச் சென்றுவிட்டார். முத்துச்சாமி சிந்தனையில் ஆழ்ந்தார். 'ஒரு வேலைக்காரி எனது மருமகளாவதா?' அவருக்கு இரத்தம் கொதித்தது. ஏன் இவன் இவ்வளவு பிடிவாதமாயிருக்கிறுன்? வசந்தத்திற்குத்தான் இத்தனை பணமும் போய்ச் சேரவேண்டும் என்ற விதிபோலும்! முத்துச்சாமி ஏதோ பழைய சிந்தனையில் ஆழ்ந்தார். 'ஓ... அப்படியும் இருக்குமோ?'...... அவருக்குத் தலை சுழன்றது. தாம் பணம் சம்பாதிக்கச் செய்த வஞ்சனைகள், சூழ்ச்சிகள் அனைத்தும் கண்முன்னே நின்று பயங்கரமாகத் தாண்டவமாடின.

'ரங்கா' என்று அவர் தழுதழுத்த குரலில் அழைத்தபொழுது அறைக்குள் எட்டிப் பார்த்த ரங்கன், முத்துசாமியின் கண்களில் இருந்து கண்ணீர் வருவதைப் பார்த்துத் திகைத்துப்போய் விட்டான்.

பாவங்களை அழுது தீர்க்கின்றாரோ? முத்துச்சாமியின் உதடுகள் அவரை அறியாமலே ஏதோ ஒரு இரகசியத்தை ரங்கனிடம் கூறத்தொடங்கின. ரங்கன் திகைப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

"ரங்கா! இனி நான் அதிக நேரம் உயிர் வாழ மாட்டேன். எனது பாவங்களுக்குப் பலாபலன்களை அனுபவிக்கின்ற நேரம் நெருங்கிவிட்டது. ரங்கா! கண்ணையாவை நான் ஏன் வேலையை விட்டு விலக்கினேன் என்று உனக்குத் தெரியுமா? அவன் ஒரு பிழையும் செய்யவில்லை. முதற்பரிசு பெற்ற அதிர்ஷ்ட இலாபச்சீட்டு ஒன்றை வாங்கியதுதான் அவன் செய்த தவறு. ரங்கா! உனக்குக் கேட்கத் திகைப்பாக இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்னால் கண்ணையா அதிர்ஷ்ட இலாபச் சீட்டு ஒன்று வாங்கியிருந்தான். முடிவுகள் வெளியாகும் தினத்தன்று அதை என்னிடம் கொடுத்து 'ஐயா! எனக்கும் பரிசு உண்டா?' என்று பார்த்துச் சொல்லும்படி கேட்டுக்கொண்டான். நான் பத்திரிகையைப் பார்த்தேன். ஒரு இலட்சம் ரூபா விழுந்திருந்தது. நான் திகைத்தேன். இலட்சாதிபதியான எனக்கு அது பெரிய காசல்ல. எனினும் எனது வேலைக்காரன் இலட்ச ரூபாய் பெறுவதை என்னால் பொறுக்க முடியவில்லை. பேராசை தூண்டியது. 'பரிசு வரவில்லை' என்று அவனிடம் கூறி ஏமாற்றிவிட்டு நான் இரகசியமாகச் சென்று பணத்தைப் பெற்றுக்கொண்டேன். எத்தனையோ மோச வேலைகளில் ஈடுபட்டு வெற்றி கண்டவன் நான். அதனால் என் மனச்சாட்சியே செத்துவிட்டதென்ற உணர்ச்சியுடன் வாழ்ந்தேன். ஆனால் கண்ணையாவைப் பார்க்கும்பொழுது அது சிறிது சிறிதாகத் தளிர் விடுவதை உணர்ந்தேன். இதனாலே தான் அவனை வேலையை விட்டே விலக்கினேன்; ஆனால், விதி இப்பொழுது உன்மூலமாகப் பழி வாங்குகின்றது. உரியவரிடம் சேர்க்கத் துடிக்கின்றது. ரங்கா! நான் இறக்கும்பொழுது செய்கின்ற ஒரேயொரு நல்ல

காரியமாக இருக்கட்டும். பரிசுப் பணத்தை இரண்டு மடங்காகக் கொடுத்துவிடு. நீ விரும்பிய படியே வசந்தத்தைத் திருமணஞ் செய்......''.

முத்துச்சாமி நிரந்தரமாகப் பேச்சு மூச்சற்றவராகி விட்டார். அவரது பாபச் சொத்துக்களை ஏழைகட்குப் பகிர்ந்தளித்தான் ரங்கன். கண்ணையாவிற்குப் பரிசுப்பணம் இரட்டிமடங்காகக் கிடைத்தது. ரங்கனுக்கும் பரிசு கிடைக்காமலில்லை. வசந்தம் தான் கிடைத்தாளே.

# தியாகச் சுடர்

செல்வி சி. சுதந்திரச்செல்வி

நீண்டு வளைந்து செல்கின்ற புகையிரதப் பாதையில் பேரிரைச்சலோடு புகையைக் கக்கியவண்ணம் யாழ் தேவி ஓடிக்கொண்டிருந்தது. புகையிரதத்தில் யன்னல் ஓரமாகச் சாய்ந்தபடி துப்பறியும் நாவல் ஒன்றில் ஆழ்ந்திருந்தாள் விஜி. அவள் இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புப் பயிலும் வைத்தியத்துறை மாணவி. நாவலில் மூழ்கியிருந்தவளுக்குப் புகையிரதம், புகையிரத நிலையமொன்றில் நின்றதோ, தனது பெட்டிக்குள் ஒருவன் ஏறியதோ தெரியவில்லை. அவளுக்கு அவ்வளவு கவனமும் நாவலில்தான் இருந்தது.

ஏதோ ஓர் அரவம் கேட்டுத் திடுக்கிட்டவள், நிமிர்ந்து பார்த்தாள். அவளது மனம் கலவரமடையத் தொடங்கியது. 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்று பழமொழி ஒன்று கூறுவார்களே; அதைப்போல் அவளது மனப்பயத்தை முகம் காண்பித்துவிட்டதோ? இவ்வளவிற்கும் பயப்படுவதற்குப் புகைவண்டியில் ஏறியவன் பேயோ அல்லது பிசாசோ அல்ல. அழகான கம்பீரத் தோற்றமுள்ள ஒரு வாலிபன். விஜியின் பயத்தைக் கண்டதும் அவன் சிரித்துக்கொண்டே, 'என்ன மிஸ் பயந்துவிட்டீர்களா? நீங்கள் பயப்படு

மளவிற்கு நான் ஒரு இராட்சதன் அல்ல. நான் ஒரு பல்கலைக்கழக மாணவன்தான்' என்று கூறினான். தன்னைப்போல் அவனும் ஒரு மாணவன் என்பதை அறிந்ததும் விஜியின் மனம் ஆறுதலடைந்தது.

பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சேர்ந்தால் பேச்சுக்குக் கேட்கவா வேண்டும்? உரையாடலுக்கிடையே அவன், நான் ஒரு கலைத்துறை மாணவன் என்றும் கலைமாணிப் பட்டம் பெறுவதற்காகப் பல்கலைக் கழகத்திற் கல்வி பயில்கின்றேன் என்றும் தனது பெயர் பாஸ்கர் என்றும் கூறினான். இருவரும் ஒருமித்தே பேராதனையைச் சென்றடைந்தார்கள். இச் சம்பவத்தின்பின் இருவரும் சந்திக்கும்பொழுதெல்லாம் கதைத்துக்கொள்வார்கள். இச் சந்திப்புக்கள் இருவருக்குமிடையிற் காதலை உருவாக்க வழிசெய்தன. நாளடைவில் பாஸ்கர், விஜி இருவரும் மனமொத்த காதலர்களாக மாறிவிட்டனர்.

இருவரும் படிப்பு முடிந்து பட்டமும் பெற்றுவிட்டார்கள். பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு விடுதலையும் கொடுத்துவிட்டார்கள். இருவரும் பிரிய வேண்டிய நாளும் வந்துவிட்டது. இருவரது வசிப்பிடங்களும் யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடத்தில் இருந்தன. எனவே வழக்கம்போலச் சந்திக்கமுடியாத நிலை இருவருக்கும். நேரிற் சந்தித்து அன்பைப் பரிமாறிக் கொள்ள முடியாவிட்டாலும் அதற்குக் கடிதம் துணை நிற்கும் என்ற நம்பிக்கையில் இருவரும் பிரிந்தனர்.

விஜி, யாழ்ப்பாணத்திற்கு வந்து ஒரு மாதம் முடிவுறுவதற்கு முன்பே அவளுக்கு வைத்தியசாலை ஒன்றில் டாக்டராகக் கடமையாற்றுவதற்கு அரசாங்கத்தாரிடமிருந்து அழைப்பு வந்திருந்தது. இதே நேரத்தில் பாஸ்கருக்கும் கல்லூரி ஒன்றில் ஆசிரியப் பதவி கிடைத்துவிட்டது. இருவரும் தமது மகிழ்ச்சியை நேரில்

சந்தித்துக் கொண்டாடாமல் இருந்தாலும் கடிதத்தின் மூலம் அக் குறையைத் தீர்த்துக்கொண்டார்கள்.

ஒருநாள் விஜி தனது கடமையை முடித்துவிட்டு வைத்தியசாலையிலிருந்து காரில் வீடு திரும்பினாள். அங்கு தனது தாய், தகப்பன், சகோதரர்கள் ஆகியோர் ஒருவருடன் கதைத்துக்கொண்டிருந்தார்கள். வீட்டின் நடு மண்டபத்தில் இருந்தே அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருந்த இடத்திற்குச் செல்லாமல் விஜியின் அறைக்குச் செல்வதற்கு வழி இருந்தபடியால் விஜி அவர்களைக் கவனிக்காமல் தனது அறைக்குச் சென்றுவிட்டாள். ஆடைகளை மாற்றிய வள் சிறிதுநேரம் களைப்பாற எண்ணிக் கட்டிலிற் சாய்ந்தாள். திடீரென அவளது அறைக் கதவு திறக்கப் பட்டதும் பாஸ்கர் அவளது அறைக்குள் நுழைந்தான். பாஸ்கரது திடீர் வருகை விஜியைத் திகைப்படையச் செய்தது. ‘விஜி’ என்ற பாஸ்கரின் கனிவான குரலைக் கேட்டுத் தன்னைச் சுதாகரித்துக்கொண்டவள், ‘பாஸ்கர்... வந்து... வந்து’ என்று நாக்குழறினாள். ‘என்ன விஜி’ வந்து வந்து என்கிறாய்? நான்தானே வந்துவிட்டேனே? உனது பெற்றோருக்குப் பயப்படு கின்றாயா? அவர்களிடம் எங்களது உறவைக் கூறி உத்தரவும் வாங்கிவிட்டேன். இனி என்ன? திருமணத் திற்கு நாள் பார்க்கவேண்டியதுதான்’ என்று பாஸ்கர் அமைதியாகக் கூறினான். விஜிக்கு இதைக் கேட்டதும் ஒருபுறம் வியப்பாகவும் ஒருபுறம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இதனால் பாஸ்கர் தான் அவளது வீட்டிற்கு வந்ததையும் விஜியின் பெற்றோரிடம் தங்களது உறவைக் கூறி அவர்களின் சம்மதத்தைப் பெற்றதை யும் மகிழ்வுடன் கூறினான். பின்னர் கேட்கவா வேண்டும்? இருவரும் இன்பக் கடலில் மூழ்கினார்கள். விஜி தனது திருமணத்தை இரண்டு வருடங்கள் கழிந்ததும் நடத்தலாம் என்று கூறியபடியால் பாஸ்க ரும் அதனை ஏற்றுக்கொண்டுவிட்டான்.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றபடியால் வருடமும் ஒன்று கழிந்துவிட்டது. தனது திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கையில் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் இருந்த விஜி தனது கடமையிலே கண்ணுக இருந்தாள். பாஸ்கரிடமிருந்து சில நாட்களாகக் கடிதங்கள் வராமல் இருந்ததினுல் விஜியின் மனம் சஞ்சலமடையத் தொடங்கியது. இதனுல் விஜியின் பெற்ருேருக்கும் பாஸ்கரின்மீதிருந்த நம்பிக்கை சற்றுத் தளர்வடையத் தொடங்கியது. ஒரு கிழமைக்கு இரு கடிதம் எழுதும் பாஸ்கர் ஒருவருடமாகியும் தனக்குக் கடிதம் அனுப்பாமல் இருப்பதை எண்ணி விஜி சொல்லொணுத வேதனைப்பட்டாள். தம்மிருவருக்கும் இடையில் இருந்த இடைவெளி இப்போ அகன்ற வெளியாகிவிட்டதை எண்ணியெண்ணிக் கவலையடைந் தாள். பெற்ருேர் அவளை வேறு விவாகஞ் செய்யத் தூண்டிக்கொண்டே இருந்தனர். அவளது அழகிற் காகவும் உத்தியோகத்திற்காகவும் எத்தனையோபேர் காத்துக்கிடந்தனர். ஆனுல் விஜியின் மனம் இதற்குச் சம்மதிக்கவில்லை. எனவே இதற்கு ஒரு வழி காண்பதற் காக விஜி தனது சிநேகிதி லதாவின் துணையுடன் தனது பெற்ருேர்க்குத் தெரியாமல் பாஸ்கரது வீட்டுக்குக் காரை ஓட்டிக்கொண்டு சென்ருள். பாஸ்கரது வீட்டு வாசலில் விஜியின் கார் நுழைவதற்கும் அங்கிருந்து வேருெரு கார் வெளியேறுவதற்கும் சரியாக இருந்தது. அக் காரினுள் இருந்தவர்களைக் கண்டதும் விஜிக்கு உலகமே சுழல்வதைப்போலிருந்தது. விஜி காரை நிறுத்து வதற்குள் மற்றைய கார் வெளியேறிவிட்டது. அக் காரினுள் இருந்தது வேறுயாருமல்ல. பாஸ்கரும் இன்னெரு பெண்ணுந்தான். அப் பெண்ணின் கழுத்தில் மின்னிக் கொண்டிருந்த புதிய மங்கலநாணைக் கொண்டு அவள் பாஸ்கரின் மனைவி என்ற விஷயம் தெரிந்துவிட்டது. இனி விஜிக்கு அங்கு என்ன வேலை? விஜியைச் சற்றுத் தள்ளி அமரச்செய்துவிட்டுத் தான் காரைச் செலுத்தத் தொடங்கினுள் அவளது சிநேகிதி லதா. உண்மையை

விஜியின் பெற்ருேருக்குக் கூறிவிட்டு லதா வீடு திரும்பினுள்.

தனது வாழ்க்கையில் ஒரு பகுதியென்ன வாழ்க்கையே முடிந்துவிட்டதாகக் கருதிய விஜி, தனக்காக வாழ்ந்த வாழ்க்கை போதும், இனிப் பிறருக்காக வாழ்வோம் என்ற எண்ணத்தில் தனது கடமையைச் செய்யத் தொடங்கினுள்.

பாஸ்கரைப்பற்றிய விஷயங்கள் அனைத்தையும் தனது பெற்ருேருக்குக் கூறிவிட்டுத் தனது வாழ்க்கைக்கு வேண்டிய முன்னேற்றமான விஷயங்கள் எதையும் செய்யவேண்டாம் எனக் கூறிவிட்டாள். விஜியின் பிடிவாத குணத்தையறிந்த அவளது பெற்ருேரும் ஏதும் செய்ய முயலவில்லை. சொந்த வாழ்க்கையில் இடறி விழுந்தவள் வாழ்க்கையை எப்படிச் சந்தோஷமாக ஆரம்பிக்கமுடியும்? யாருக்காக வாழவேண்டும்? என்ற சிந்தனையில் இருந்தவளுக்கு வருங்காலச் சந்ததிகளை வாழ்விக்கும் கடமை தனது கடமையாக அமைந்திருப்பதால் அதற்காகத் தான் உயிர்வாழ விரும்பினுள். விஜி தனது வீட்டில் ஒருவருடனும் கதைப்பதில்லை. நேரத்திற்குத் தகுந்தபடி தனது தேவைகளைப் பூர்த்திசெய்வதுமில்லை. ஆனுல், தனது வேலையை மாத்திரம் குறைவின்றிச் செய்துகொண்டு வந்தாள். மற்றவர்களது கவலையிற் பங்குகொள்வதன்மூலம் தனது கவலையை மறந்துகொண்டு இயந்திர வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தாள். இத்தோடு மட்டுமல்லாது தனது சகோதரிகளின் எதிர்கால வாழ்வைச் சீராக அமைத்து அவர்களைச் சிறந்த இடங்களில் மணம் முடித்தும் வைத்தாள். இவ்வளவு கடமைகளைச் செய்தும் அவள் தனக்குப் பாஸ்கரால் ஏற்பட்ட நிலையைப்பற்றி ஒருவரோடும் கதைப்பதில்லை. வாடிய முல்லைபோற் சோர்ந்திருந்தாள். தனது திருமணப் பேச்சைப் பெற்ருேர்கள் எடுத்தபொழுதெல்லாம் 'தனது வாழ்க்கையில் திருமணம் என்ற பேச்சுக்கு

இடமேயில்லை' எனச் சமாளித்துவிடுவாள். இவளது இச் செய்கை பெற்றேருக்குக் கவலையைக் கொடுத்தது.

தன் வாழ்க்கையில் இனி எவ்விதமான சோதனைகளும் ஏற்படாமல் இருக்கும் என்று இருந்தவளுக்குப் பெரியதொரு சோதனை காத்திருந்தது எப்படித் தெரியும்? வைத்தியசாலையில் தனது கடமையை முடித்துவிட்டுத் திரும்பியவள் வீட்டில் ஆறுதலாக இருக்கும்போது திடீரென 'டெலிபோன்' அலறியது. மோட்டார் விபத்தொன்றிற் சிக்கிய ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் வேறு டாக்டர்கள் அண்மையில் இல்லாத காரணத்தால் விஜியை உடனடியாக வரும்படியும் தாதி ஒருவர் டெலிபோன் மூலம் கூறிய செய்தியைக் கேட்டதும் விஜி தனது நிலையைச் சிறிதும் கவனியாது வைத்தியசாலைக்கு அசுர வேகத்திற் காரைச் செலுத்தினள். பரபரப்பாக உள்ளே சென்றவளுக்குப் பெரிய இடியொன்று காத்திருந்தது. விபத்துக்குள்ளாகி இருந்த நபரைக் கண்டதும் விஜி 'பாஸ்கர்' என்று கத்தியேவிட்டாள். பாஸ்கர் நினைவிழந்து கட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருந்தான். அவனுக்கு ஏற்பட்டிருந்த விபத்தில் அவனுடம்பில் இருந்த இரத்தம் சிறிதளவு வெளியேறிவிட்டது. இதனல் அறிவிழந்த நிலையில் பாஸ்கர் இருந்தான். இரத்தம் செலுத்தினல் அவனுக்கு எவ்வித திங்கும் ஏற்படாது என வந்திருந்த டாக்டர் கூறினர். இரத்த வங்கியில் உள்ள இரத்தம் அவனுக்குப் பொருந்தாத பிரிவாக இருந்தபடியால் இரத்தம் செலுத்த முடியவில்லை. தனது அறையில் பாஸ்கருக்கு ஏற்பட்ட இந் நிலையை எண்ணி மனம் தளர்ந்துகொண்ட விஜிக்கு இச் செய்தி எட்டியது. உடனே இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு தனது இரத்தத்தைப் பரிசோதிக்குமாறு கூறினள். இறைவனது அருளால் அவளது இரத்தமும் பாஸ்கரது இரத்தமும் ஒன்ருகவே இருந்தன. தனது இரத்தத்தைப் பாஸ்கருக்குச் செலுத்து

மாறு விஜி கூறியபடியால் அவளது இரத்தம் பாஸ்கரது உடம்பிற்குள் செலுத்தப்பட்டது. அதன் பிறகு தன் உடல்நிலையைக் கவனியாது பாஸ்கர் எழுந்து நடமாடவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு பாஸ்கரது அருகிலேயே விஜி அமர்ந்திருந்தாள். பாஸ்கர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவார காலமாகியும் அவனது மனைவி வந்து பார்க்கவில்லை என்பதை நினைத்து விஜி மேலும் கவலையடையத் தொடங்கினாள். விஜியின் பராமரிப்பால் சுகமடைந்து கொண்டு வந்த பாஸ்கர் வாய் திறக்கும்போது எல்லாம் 'விஜி! விஜி! நான் உனக்குச் செய்த துரோகத்திற்குக் கடவுள் எனக்குத் தண்டனை கொடுத்துவிட்டார். என்னை மன்னிப்பாயா? விஜி' என உளறினான். இதனால் தன்மேல் பாஸ்கருக்கு இன்னமும் அன்பு இருப்பதை எண்ணி ஆறுதலடைந்தாள். ஆனாலும் அவளது மனைவியின் மர்மம் புரியவில்லை. டாக்டர்களின் அயரா உழைப்பினால் கண்விழித்து உடல்நிலை குணமடைந்த பாஸ்கர், விஜி தனக்குச் சேவை செய்வதைக் கண்டதும் திடுக்கிட்டான். தன்னால் துரோகம் செய்யப்பட்டவள் தனக்கே தாதியாக இருப்பதைக் கண்டதும் அவனுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சிகள் நினைவிற்கு வந்தன. தனது தந்தை சம்மதிக்காதபடியால், தான் வேறு பெண்ணை மணந்ததாகவும் அவளுடன் தான் சரிவர நடக்காமல் விஜியின் நினைவாக இருந்ததால் அவள் தன்னை விவாகரத்துச் செய்து வேறு ஒருவரை மணந்துவிட்டாள் என்றும் கூறினான். இதனால் தான் தாய் தந்தையரிடமும் சொல்லாமல் வேலையையும் துறந்து அனாதைபோல் சுற்றும்போது தனக்கு இந்நிலை ஏற்பட்டது எனக் கூறி விம்மிவிம்மி அழுதான். பாஸ்கரின் அவல வாழ்க்கையைக் கேட்ட விஜி, தனக்கு இந்நிலை ஏற்பட்டது மாத்திரமன்றி பாஸ்கருக்கும் இந்நிலை ஏற்பட்டு விட்டதே எனக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். விஜி அழுவதைப் பார்த்ததும் பாஸ்கர், 'விஜி' ஏன் அழுகின்றாய்?

எனக்குக் கடவுள் இந்நிலையைக் காட்டி இருக்கின்றார். உனக்கு நான் செய்த துரோகத்திற்குத் தண்டனை யாகக் கடவுள் எனது காலைப் பறித்துவிட்டார். என்னை இனிமேல் கவனிக்க ஒருவருமில்லை எனக்கூறியழுதான். உடனே விஜி 'பாஸ்கர் உங்களை இறைவன் கைவிட்டா லும் நான் கைவிடமாட்டேன்' என அவனது கண் ணீரைத் துடைத்துவிட்டாள்.

விஜி தனது பெற்றோரின் சம்மதத்துடன் காலிழந்த நிலையிலும் பாஸ்கரை மணந்துகொண்டாள். எல் லாம் முடிந்து ஒருவருடமாகியது. விஜி தனது குழந் தையைக் கையில் ஏந்திக்கொண்டு இரண்டு சக்கரங் கள் பொருத்திய வண்டியில் பாஸ்கரை வைத்து வீதி யில் தள்ளிக்கொண்டு உலாவச் செல்கின்றாள்.

## அமுதவாக்கு

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல், கோபமும் குறையும் இல்லாமல், சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர் பாராமல் நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல் களே. நூல்களைச் சென்றடைந்தால், உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும்போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந் திங்கு செய்தாலும் வசைமொழி கூறுமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல் கற்பிப்பனவும் நூல்களே.

— ரிச்சேட் டி பியூறி

---

அன்பளிப்பு :

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்

தொலைபேசி : 7233

மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்.

குகன் அச்சகம், தெல்லிப்பழை